
# திராவிடநாடு



# கேட்டீரா! சேதி!

மொரார்ஜி தேசாய் உண்ணு விரதம் இருந்ததன் விளைவாக ஆமதாபாத் மக்கள் அனைவரும் திருந்தி காங்கிரசின் பக்கம் சேர்ந்துவிட்டதாகப் பேசப்படுகிறதல்லவா? அந்த ஆமதாபாத்தில் செப். 17-ந் தேதி உள்ளூர் காங்கிரஸ் கமிட்டி ஒரு கூட்டம் போட முயற்சித்ததாம்! மக்கள் அதற்கு இடம் கொடாததோடு, ஒலிபெருக்கிக்கு மின்சாரம் தரவும் முன்வராமல் போகவே, கூட்டம் நடத்த முடியாது ஏமாற்றத்தோடு திரும்பினார்களாம். பேச வந்த காங்கிரஸ் தலைவர்களும் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொண்டு போனார்களாம்.

✱

கோயில் குருமார்களிருக்கிறார்களே, அவர்களையும் பிற்போக்கு வகுப்பில் சேர்க்க வேண்டுமாம்! எப்படி பிற்பட்ட வகுப்பினருக்கு கல்வி, பதவிகளில் சலுகைகள் காட்டப்படுகிறதோ அதுபோல அவர்களுக்கும் தரவேண்டுமாம்!—இவ்வண்ணம் பேசியது எந்த அர்ச்சகர் என்று கேட்கிறீர்களா? அர்ச்சகரல்ல அவர், அமைச்சர்! தென்னிந்திய அர்ச்சக சங்கத்தின் ஆண்டுவிழா திருவல்லிக்கேணி "வசந்தா பங்களா"வில் நடைபெற்றபோது, கலந்து கொண்டு, கண்ணீர் உகுத்திருக்கிறார். எப்படியிருக்கிறது கதை பார்த்தீர்களா! உடல் அலுங்காது ஒய்யாரமாக வாழ்வு அமைத்துக்கொண்டிருப்போருக்கும் சலுகைகள் தரவேண்டுமாமே! இந்த இலட்சணத்தில், அமைச்சர்கள் எல்லாம் பார்ப்பனரல்லாதாருக்காகவே யிருக்கிறார்கள் என்று பேசப்படுகிறது.

✱

வரப்போகிற பொதுத் தேர்தலுக்காக 51 கோடி வாக்குச் சீட்டுகள் அச்சடிக்குமாறு டில்லி உத்தரவிட்டிருக்கிறதாம். நாசிக்கிலுள்ள இந்திய சர்க்காரின் அச்சகத்தில் இவை அச்சு இயற்றப்படுமாம்.

✱

பிரிட்டனிலுள்ள அரசியல் கட்சிகளில் சிறியது என்று கருதப்படுவது லிபரல் கட்சியாகும்! கிளமெண்ட் டேவிஸ் எனும் பெயர் கொண்ட இதன் தலைவருக்கு இப்போது 72 வயதாகிறது. "இளைஞர்கள் கையில் கட்சியை ஒப்படைக்கவேண்டும்", என்று தெரிவித்து இந்தக் கிழமை இந்தப் பெரியவர் தனது தலைமைப் பதவியை ராஜினமா செய்துவிட்டார். பார்லிமெண்டில் லிபரல் கட்சியின் சார்பில் ஆறு பேர் மட்டுமே இருக்கிறார்கள்.

✱

சூரிய ஒளியினைக் கொண்டு இயக்கப்படும் அடுப்புக்கு இங்கு கிராக்கியில்லையென்று கைவிடப்பட்டுவிட்டதல்லவா? இப்போது, டில்லி வேறு ஒரு முயற்சியில் இறங்கியுள்ளதாம். சூரிய ஒளியைக்கொண்டு, தண்ணீரைச் சுடவைத்தல்—தண்ணீர் 'பம்பு'—முதலியவைகளைச் செய்யலாம் என்பதுதான் அந்த யோசனை.

✱

இராமாயணத்தைப் பரப்புவதற்காக உலக இயக்கம் ஒன்று உருவாக்கப்பட்டு இருக்கிறதாம். இதன் பெயரே 'உலக ராமகதா இயக்கம்' என்பதாம், குண்டூர் வக்கீல் அனந்தாச்சாரி என்பவருடைய முயற்சியாம் இது.

✱

தென் கன்னடத்திலுள்ள கார்வார் எனுமிடத்தில் தையற் கலையில் பயிற்சி தரும் கூடம் ஒன்றை சென்னை சர்க்கார் ஆரம்பிக்க இருக்கிறதாம். இதற்காக இந்த ஆண்டு ரூ 4630 அனுமதித்திருப்பதாகவும், ரூ. 1,81,200 செலவில் அங்கு ஒரு தொழிற்சாலை ஆரம்பித்து தையல் இயந்திரம் சம்பந்தமான சாமான்கள் செய்ய இருப்பதாகவும் தெரிகிறது.

✱

மீர்சாகாலிப் என்பவர் உருது விலும் பர்சிய மொழியிலும் வல்லமைமிக்க கவிஞராம். அவர் வாழ்ந்த இல்லத்தை எப்படிச் சிறந்தமுறையில் போற்றிப் பாதுகாப்பது என்று இந்திய அரசாங்கம் எண்ணி வருகின்றதாம்.

திருவள்ளுவர் நாளுக்கு விடுமுறைவிட மறுக்கும் அமைச்சர் பெருமக்கள், எதற்கும் வடக்கு நோக்கிப் பார்க்கிறார்களே, புலவரைப் போற்றும் பெற்றியை யாவது வடவரிடமிருந்து கற்கக் கூடாதா?

✱

இந்து சமயத்தின் சடங்கு நெறிப்படி நடத்தப்படும் திருமணங்கள் சட்டப்படி செல்லத்தக்கன அல்லவாம். இங்கல்ல; சிங்கப்பூரில். அதைப்பற்றி ஆராய்ந்து பதிவுத் திருமண முறையை அமுலாக்கப் பதின்மர் கொண்ட குழு ஒன்று அமைக்கப்பட இருக்கிறது.

சிங்கைவாழ் மக்களின் நெடுநாள் விருப்பம் இது என்கின்றனர்.

✱

வெள்ளையருக்கு வேறு; கருப்பருக்கு வேறு, என்று அமெரிக்க நாட்டில் தனித் தனிப் பள்ளிகள் இரண்டாண்டுகளுக்கு முன் வரை இருந்து வந்தன. அந்த நிறவெறிக்கொள்கைசட்ட விரோதமானது, மக்கள் சரிநிகர் என்று அமெரிக்க சுப்ரீம்கோர்ட் 1954-ம் ஆண்டு மே திங்களில் தீர்ப்பு கூறியது. அதன் பின்னர் 300,000 நீக்ரோ இளைஞர்கள் வெள்ளையருடன்கலந்து கற்கின்றனர் என்று வாஷிங்டன்செய்தி ஒன்று கூறுகின்றது.

✱

தூநிமா என்ற பையனின் வயது பத்துதான். ஆனால் அவன் இன்னும் சில நாட்களில் லாடக்கில் உள்ள 'ரிசாங்' வமிசத்தின்வார்சு ஆகப்போகிறான். ஓய்வு பெற்ற, இராணுவ அதிகாரி ஒருவரின் மகன் அவன். அவன்தான் இனி 'ரிசாங்' வமிசத்தின் தலைவன்.

✱

# காந்தி ஜெயந்தி

அத்தனையும் கற்பனையே

**அரசியல் விளக்க நாடகம்**

அவ்வளவும் விளக்கமளிக்க

**இடம்:-** மாகாளியம்மன் கோயில் மண்டபம்.

**இருப்போர்:-** காந்தி ஜெயந்தி கமிட்டியார்
பொதுமக்கள்
போலீஸ் அதிகாரி.

**காலம்:-** அக்டோபர் 2—மாலை 6 மணி.

**நிலைமை:-** மகாத்மாவின் படத்துக்கு மாலை சூட்டி, மண்டபத்தில் அலங்கார மேடையில் வைக்கப்பட்டிருக்கிறது.

''வாழ்க நீ எம்மான்'' என்ற பாடலை டாக்டர் வத்சலா பாட, அனைவரும் பக்தியுடன் கேட்டு இன்புறுகின்றனர்.

பாடல் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, ஜெயந்தி கமிட்டித் தலைவர், காங்கிரஸ் ஊழியர் காத்தமுத்துவை வெளியே அழைத்துக்கொண்டு வந்து பேசுகிறார்.

**ஜெகநாதன்:-** *காத்தமுத்து! உனக்கு என்ன வரவர மூளை இப்படி வரண்டு போயிண்டிருக்கு...*

**காத்தமுத்து:-** *என்ன சாமி! என்ன? என்ன தவறு நடந்திடுச்சி...*

ஜெக:- மடச் சாம்பிராணிடா நீ, நீதானே மகாத்மா பட அலங்கார வேலைகளை எல்லாம் கவனித்துக் கொள்வதாக ஒப்புக்கொண்டே...

[போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுதுரை வரக் கண்டு, காத்தமுத்துவிடம் பேசுவதை நிறுத்திக்கொண்டு, ஜெயந்தி கமிட்டித் தலைவர் ஜெகநாதன், முக மலர்ச்சியுடன் போலீஸ் இன்ஸ்பெக்டரைப் பார்த்து]

ஜெக:- வாங்கோ! வாங்கோ! என்னடா, இன்னும் இன்ஸ்பெக்டரவாளைக் காணுமேன்னு யோசிச்சிண்டு இருந்தேன்... போங்க, உள்ளே போங்க...

இன்ஸ்:- எல்லாம் சரிவர நடக்குதேல்லோ...?

ஜெக:- பிரம்மானந்தமா, நடந்துண்டு இருக்கு... அலங்காரம் பகுப் பிரமாதம் போங்களேன். எல்லாம் காத்தமுத்துவோட கைங்கரியந்தான்... பய சாமான்யபபட்டவனல்ல... உமக்குத்தான் தெரியுமே...

இன்ஸ்:- (சிரித்தபடி) காத்தமுத்துவைத் தெரியாதவா கூட உண்டா இந்தப் பகுதியிலே.

ஆசாமி, அடே அப்பா, இலேசான பேர்வழியல்லவே, நாலு கான்ஸ்டபிள்கள் பிடித்து பலம் கொண்டமட்டும் இழுக்க இழுக்க கொடியைத் தரவே இல்லையே, ஆசாமி. கிழிந்து சுக்கு நூறுப் போனாலும் பரவாயில்லை, கையை முறிச்சிப் போட்டாலும் கவலையில்லை, கொடியை மட்டும் தர முடியாதுன்னு வீராவேசமாய் பேசின காத்தமுத்து அல்லவோ!

[எதையோ உற்றுக் கேட்கிறார்]

ஜெக:- யார் பாடறதுன்னு யோசிக்கிறீரா? வத்சுதான்... நம்ம மகதான்... டாக்டர் வத்சு...

இன்ஸ்:- அதுதானே கேட்டேன்... என்னடா இது, எம். எஸ். பாடுகிறதுபோல இருக்கேன்னு பார்த்தேன்... டாக்டர் பாடறாங்களா...? சாரீரம் வரவர ரொம்ப இனிமையாயிண்டு வருது...

ஜெக:- ஓய்வு இல்லை, அவளுக்கு... டாக்டர்! டாக்டர்! டாக்டர்னு சதா தொல்லை தர்ரா... நம்ம மிட்டா மாணிக்கம் ஒருத்தர் போதும், இருமினாலும் தும்மினாலும், உடனே ஆள் அனுப்பி விடுகிறார், டாக்டரை உடனே வரச்சொல்லுன்னு.... இவ போயி, ஏதாவது மருந்தாவது கொடுக்கணும், இல்லையானா, நாலு வார்த்தையாவது பேசணும்... அப்பத்தான், அவருக்கு உடம்பு சொஸ்தமாறது...

இன்ஸ்:- ஆமாமாம்...

ஜெக:- வேடிக்கையைக் கேளுங்கோ... உடம்புக்கு ஒண்ணும் இல்லேன்னாலும், டாக்டரை வரச்சொல்லு, நாலு நாளா, தலைவலி, வயித்துவலி, தும்மல், இருமல், ஒண்ணும் இல்லை, என்ன காரணமோ தெரியல்லே, பயமாயிருக்குன்னு சொல்லி, வத்சுவை வரச் சொல்றார்...

இன்:- மிட்டா மாணிக்கம் ஒரு செமிகிராக்...பணம் இருக்கு, கொள்ளை கொள்ளையா...

ஜெக:- குணமும் இருக்குன்னு சொல்லுங்கோ...

இன்:- பணம் ஏராளமாச் சேர்ந்தா, குணமும் தானா வந்துவிடுது... வரவில்லையானாலும், இருக்கிறதாக எண்ணிக்கொள்ளவேண்டியதுதானே... அது கிடக்கட்டும் ...மண்டி மாதவனும் தேங்காய்க் கடை கோவிந்தனும், ஜெயந்திக்குப் பணம் கொடுத்தார்களா...?

ஜெக:- கொடுத்தார்களே......எல்லாம் உங்களோட தயவு தான்... கேள்விப்பட்டேன்...

இன்:- ஒரு வாரத்துக்கு முந்தியே நீங்க என்னிடம் சொல்லி இருந்தா, பணம் மளமளன்னு வசூலாக வழி செய்திருப்பேன்,

**அண்ணாதுரை**

வேறே யாரும் தேவையில்லையே, ஒரு நாலு நாள், சாயரட்சை ஆறு மணிக்குக் கிளம்பி எட்டு மணி வரையிலே, நானும் டாக்டரும் போயிட்டு வந்தா போதுமே ...ஜெயந்தி பெரிய கொட்டகை போட்டு நடத்தி இருக்கலாமே... சரி, சரி...எப்படியோ ஒண்ணு உமக்குத் திருப்தின்னு எனக்கும் திருப்திதான்...

[உள்ளே போகிறார்]

*காத்:-* படுபாவி......சண்டாளன்... காந்தி ஜெயந்தின்னு இவனுக்கு மனசு உருகுதாம்...சாமி, தெரியுமேல்லோ, கொடிப் போராட்டத்தின்போது, இந்த 'ராட்சசன்' தான், என்னை அடி அடின்னு அடிச்சி, நடுரோட்டிலே பிணம் போலப் போட்டுவிட்டுப் போனவன்...இப்ப வந்து, பேசறான், காத்தமுத்து இலேசான பேர் வழி அல்லவே, பெரிய வீரனுச்சே, எனக்குத் தெரியுமேன்னு...எல்லாம் மேல் பூச்சு, வெளிவேஷம்.

*ஜெக:-* போடா, மண்டு! போலீஸ் ஆபீசர், அப்படித்தான், அவரோட கடமையைச் செய்ய வேணும்...இப்ப நம்ம ராஜ்யம் நடக்கறது, இதுக்கு இப்ப விசுவாசமா இருக்கார்...வந்ததை வரப்பண்ணிண்டு நம்மோட காரியத்தைக் கவனிச்சிண்டு போறதா, முன்னே அப்படிச் செய்தாரே, தடியாலே அடிச்சாரே, கைகாலை ஒடிச்சாரேன்னு பேசிண்டிருக்கிறதா? பைத்யக்காரா! அவர் ஒரு வார்த்தை சொன்னதாலேதான், அறுத்த விரலுக்குச் சுண்ணாம்பு தருவதானாலும் அதுக்கு என்ன தருகிறேன்னு கேட்கிற கர்மி, அந்த மண்டிக் கடைக்காரன், தேங்காக் கடைக்காரன், போனஉடனே பத்து ரூபா நோட்டை எடுத்துக் கொடுத்தா, தெரியுமோ...

*காத்:-* உங்களுக்கு என்னமோ இதிலே சந்தோஷம் வருது...... எனக்கு இது பிடிக்கவேயில்லிங்க...வெட்கமாக்கூட இருக்கு.

*ஜெக:-* நீ ஒரு வெகுளி...இருக்கட்டும்...நான் சொல்ல வந்ததை மறந்துவிட்டேன்...அதுக்குள்ளே இன்ஸ்பெக்டர் வந்து தொலைச்சான்...

*காத்:-* என்ன சொல்ல வந்திங்க...

*ஜெக:-* உன்னுடைபுத்தி எவ்வளவு மந்தமாயிருக்கு என்பதைத்தான். மகாத்மா படத்துக்கு மாலைகள் போட்டயே....

*காத்:-* மாலை கொஞ்சம் வாடி இருக்குது என்கிறிங்களா...?

*ஜெக:-* இல்லே......மாலை நன்னாத்தான் இருக்கு. மகாத்மாவுக்கு எது பிராணன் போன்றதோ, அந்த 'கதர்' மாலை போட்டயா...? பார்க்கிறவா என்ன எண்ணிக் கொள்ளுவா? காந்தி ஜெயந்தியன்று, மகாத்மா படத்துக்குப் போடக் கூடவா ஒரு கதர்மாலை கிடைக்கவில்லே என்று, கேவலமா, கேலியாப்பேசமாட்டாளா?

*காத்:-* வாஸ்தவம் தானுங்க...... நானும் அதை எண்ணிப்பார்க்காமலில்லே......கதர் மாலை கிடைக்கவில்லையே...பல இடம் தேடிப் பார்த்தாச்சி......சுத்தமானதா ஒண்ணு கூட இல்லே...

*ஜெக:-* இப்படி இருக்குது உன்னுடை இலட்சணம்.

*காத்:-* ஊரோட இலட்சணம்னு சொல்லுங்க......கதர் மாலை ஒண்ணு கூடக் கிடைக்காததிலிருந்து தெரியலிங்களா, ஊரோட இலட்சணம். எல்லோருமே இப்ப, காங்கிரஸ், காங்கிரஸ் என்றுதான் பேசிக்கொள்கிறாங்க...ஒரு கதர்மாலை கிடைக்கல்லே, நம்ம ஊர்லே...

*ஜெக:-* சரி ஒண்ணு கேட்டா ஒன்பது பேசிக்கொண்டிருப்பே, ஓடிப்போயி மிட்டாதார் இன்னும் வரக்காணுமே, என்னன்னு பார்த்துவிட்டு, வா...

*காத்:-* அதோ, மோட்டார் சத்தம் கேட்குதே...அவர்தான்...

[புதிய மோட்டார் ஒன்று வந்து நிற்கிறது.

மோடாரின் முன்புறத்தில், மலர் மாலையும் கதர் மாலையும் போடப்பட்டிருக்கிறது.

உள்ளே இருந்து பூதாகாரமான ஒருவர் இறங்கி வருகிறார்

ஆடம்பரமான தோற்றத்துடன் காணப்படும், அவர் விரல்களில் வைர மோதிரங்கள் மின்னுகின்றன! காதுகளில் வைரக் கடுக்கன் ஒளிவிடுகிறது. தங்க கடிகாரச் சங்கிலியில் கூட வைரம் பதிக்கப்பட்டிருக்கிறது.

'கதர் சில்க்' கோட்டும், மேலுக்கு ஜரிகை துப்பட்டாவும் போட்டுக்கொண்டு, இடையில், உயர்ந்தரக கதர் கட்டிக் கொண்டிருக்கிறார்.

மீசையின் வெள்ளை, பக்குவமாக, கருப்புப் பூச்சால் மறைக்கப்பட்டிருக்கிறது.

அவர், மோடாரைவிட்டுக் கீழே இறங்கியதும், பல்லெலாம் வெளியே தெரியும்படியாக இளித்தபடி காந்தி ஜெயந்தி கமிட்டித்தலைவர், ஜெகநாதன் அவரை, நமஸ்கரித்து வரவேற்கிறார்]

*ஜெக:-* வாங்கோ, வாங்கோ...இன்னமும் காணுமே, என்னமோ, ஏதோன்னு எண்ணிக்கொண்டிருந்தேன்......வேறே ஒரு விசேஷத்துக்குப் போய்விட்டு வருகிறாப்போலிருக்கு...

**மிட்டா மாணிக்கம்:-** ஆமாம்.....நான், சீக்கிரம் வந்துவிடணும்னு தான் நினைச்சது...மத்யானம், முன்னதாகவே படுத்துகிட்டேன், நாலு மணிக்கே எழுந்திருக்க; அதுக்குள்ளே, வேறேஒருவேலை வந்துடிச்சி, மோட்டாருக்கு...

*ஜெக:-* அப்படிங்களா...

*மி:-* ஆமாம், நம்ம சிநேகிதர் ஒருத்தர், மோட்டார் வேணும்னு கேட்டனுப்பினாரு......பக்கத்து டவுனிலே, ஜெயந்தியிலே, கனகாம்புஜத்தோட காலட்சேபமாம்... அதுக்காக...

*ஜெக:-* ஓஹோ? புரியறது, புரியறது. அங்கே கொடுத்த மாலைகள் தானு...மோட்டாரிலே...

*மி:-* ஆமாம்...இங்கே என்ன? பிரசங்கம் ஆரம்பமாயிடிச்சா...

*ஜெக:-* அதெப்படி, நீங்க இல்லாமெ, பிரசங்கம் ஆரம்பமாகும்

*காத்:-* நீங்கதானே தலைமை வகிக்கணும்.

*மி:-* நானா? வேறே யாரையாவது போட்டுக்கறதுதானே.....என்னா ...இதிலே ஒரு சின்ன இக்கட்டு இருக்குது.

(16-ம் பக்கம் பார்க்க)

# அக்டோபர்-15

மலர் 15 ] ஆண்டுச் சந்தா ரூ. 7 [7-10-56] தனிப் பிரதி 2 அணு [ இதழ் 14


'அக்டோபர் 15 அறப்போர்' என்று ம. பொ. சி. அறிவித்துவிட்டார். அறப்போர், தமிழ் மாநிலம் எங்கும் நடைபெறும் என்பதைக் கூறியிருக்கிறார் — திட்டம், விளக்கமாக, ஒரு நாள் முன்னதாக அறிவிக்கப்படும் என்பதையும் தெரிவித்திருக்கிறார்.

காமராஜர் ஆட்சிக்குத் தொல்லை தரும் செயலல்லவா இது, இதனைத் தமிழர் செய்யலாமா—செய்பவர் தமிழர் தானா—தமிழ் மக்கள் இதனை ஆதரிப்பார்களா—என்று கேட்கும் 'வக்கீல்கள்' இருக்கிறார்கள்!

ம. பொ. சி. எல்லைப் பிரச்சினை சம்பந்தமாக ஈடுபடத் தொடங்கியது காமராஜர் ஆளவந்த பிறகு அல்ல—காமராஜர் 'ஆளவந்தார்' ஆகக்கூடும் என்ற எண்ணமே எவருக்கும் எழாத நாட்களிலேயே, 'என் குருநாதர்' என்று எந்த ஆச்சாரியாரைக் குறித்துப் பாசத்துடன் பேசுவாரோ, அந்த ஆச்சாரியார் ஆட்சியின்போதே, ஈடுபட்டார்.

எனவே இப்போது, ம. பொ. சி. காமராஜர் மீது கொண்ட கசப்பினால் அறப்போர் தொடுக்கிறார் என்று எவரேனும் கூறுவரேல், அது பொருளற்ற வாதமாகும் என்பதோடு, சொல்பவர்களுக்குக் காமராஜர் இப்போது கரும்பாகிவிட்டார் என்பதைக் காட்டவும் உதவும்.

அரசியல் ரசவாதம், நீண்ட காலத்துக்குப் பலன் அளிக்காது, நரி பரியானால், மீண்டும் பரி, நரியாக நீண்ட காலம் பிடிக்காது.

எனவே, ம. பொ. சி.யின் அறப்போரைக்கண்டித்துப் பேச, பெரிய இடத்து உறவு பயன்படும் என்று பலமாக நம்பிக்கொண்டு, காமராஜர் தப்புக் கணக்குப் போட வேண்டாம், என்று கேட்டுக்கொள்ளுகிறோம்.

அறப்போர், ம. பொ. சி. முன்னின்று நடத்துகிறார்—ஆனால், தமிழ் மக்களின் சார்பாக நடத்துகிறார்.

தமிழரின் உரிமையும் உடைமையும் பறிபோகவிடலாகாது என்ற கருத்துக்கொண்ட கட்சிகள் யாவும், அவருடைய முயற்சிக்கு ஆதரவளிக்கின்றன. திராவிட முன்னேற்றக் கழகம், தன்னாலான ஆதரவு திரட்டித்தரத் தயங்காது;

எனவே, காமராஜர் சர்க்கார், காலந்தாழ்த்தாது, டில்லி ஏகாதிபத்தியத்துக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்டி, எல்லைப் பிரச்னைக்கு ஒரு நியாயமான முடிவு காண வேண்டுகிறோம்.

ஆறே நாட்கள் நடைபெற்ற அறப்போரில், 500 தோழர்கள் சிறைப்பட முன்வந்தனர்.

அவ்வளவுதானே! — என்று பேசுவதும், அதனால் என்ன? என்று கேட்பதும், அரசியல் ஆணவமாகும்.

ம. பொ. சி. இப்போதும், காங்கிரஸ் ஆட்சியையோ, காமராஜரின் ஆளுகையையோ, எதிர்ப்பவராக இல்லை.

அது, நாம்—இதிலே ஒளிவு மறைவு இல்லை.

அவர் கேட்பதெல்லாம், எல்லைப் பிரச்சினையில் டில்லி நியாயம் வழங்கவேண்டும், சென்னை சர்க்கார் அதை வலியுறுத்திப் பெறவேண்டும் என்பதுதான்.

இந்த 'அளவுக்கு' நேசக் குரலுடன் கேட்கும் ம. பொ. சி.யை, எதிரி என்றும்; குழப்பவாதி என்றும் ஏசிப் பேசிவிட்டால், பரிகாரம் கிடைத்துவிடாது.

தேவிகுளம் பீர்மேடு விஷயத்தில் சென்னையின் 'கையாலாகாத' தன்மையைக் கண்டு, தமிழர் வேதனை அடைந்துள்ளனர்.

வடக்கெல்லை விஷயத்திலும், சென்னை மந்த புத்தி காட்டி, மேலும் தமிழரை வேதனைக்கு ஆளாக்கவேண்டாம் என்று கேட்டுக்கொள்கிறோம்.

அறப்போர் நடாத்த முடிவு செய்த, ம. பொ. சி.யின் முயற்சியைப் பாராட்டுகிறோம்.

தமிழ்ப் பெருங்குடி மக்களின் ஆதரவு, திரண்டு எழும் என்று உறுதி கூறுகிறோம்.

திராவிட முன்னேற்றக் கழகம், தன் கடமையைக் கருத்திலிறுத்தி, அறப்போருக்கு ஆதரவு கிடைப்பதற்கான வழிவகை காணும் என்று நம்புகிறோம்.

சிறை சென்றுமீண்ட, ம. பொ. சி., விநாயகம், உமாபதி, தொண்டர்கள் அனைவரையும் வாழ்த்துகிறோம்.

★

# பன்றிமலைச் சாமியாரும் பண்டித நேருவும்

"உனக்கு இன்றைக்குள்ள ஏற்றம் எதிர்பாராமல் கிடைத்தது. உன்னைத் தேடி வந்தது!"

"ஆமாம் ஐயனே... தங்களுக்கு எப்படித் தெரிந்தது? தாங்கள் யாரோ?"

"இதோ பூமிதேவியைத் தொட்டு உன் இஷ்ட தெய்வத்தை நினைத்து இந்தச் சடலத்தின் இடது கையை முகர்ந்துப் பார்!"

பயபக்தியோடு வாலிபன் பூமியைத் தொட்டுக் கும்பிட்டுவிட்டு, வந்தவரின்கையை முகர்ந்தான்..."ஸ்வாமி... முருகப் பெருமானே... பழனி விபூதியின் மணமன்றோ வீசுகிறது. என்று கூறிய வண்ணம் அடிபணிந்தான்.

"மகனே... இதோ பார்... உன் இடது கையை என் கைகளின் கீழ் வை!" என்றார்.

நடுக்கமும், ஆச்சரியமும் மாறி மாறித் தாக்க இளைஞன் அவ்வாறே செய்தான், சில நிமிடங்களில் பெரியவர் தன் கைகளை எடுத்துக்கொண்டார். இளைஞன் தன் கையைப் பார்த்தான். என்ன ஆச்சரியம்! அவன் கை நிறைய கற்கண்டுத்துண்டுகள் இருந்தன!!

இது மாத்திரமில்லை.

"மகனே, இந்தமேஜைமீதுஒருபேனா வையும், வெற்றுக் காகிதத்தையும் கொண்டு வந்து வை!" என்றார், பயபக்தியோடு அவ்வாறே செய்தான் அதிசயங்களைக் கண்டு திகைத்துப் போயிருந்த அந்த வாலிபன்.

பெரியவரும்மற்றையோரும்வெளியே வந்தனர். கதவு தாளிடப்பட்டது.

"முருகா! உன் அன்பனுக்கு ஆசி கூறு!" என்று வானத்தைப் பார்த்துக் கூறினர். அறைக்குள்ளே காகிதம் காற்றிலே படபடவென்று அடித்துக்கொண்டுபறக்கும்சப்தம்கேட்டது.

பெரியவர் கதவைத் திறந்தார். உள்ளே, மேஜை மீது வைக்கப்பட்டிருந்த காகிதத்தை எடுத்தார்."இளைஞனின் வாழ்க்கை இன்பம் பெருகும்!" என்றிருந்தது! "எல்லாம் முருகன் திருவிளையாடல்" என்று கூறிய வண்ணம் பெரியவர் வெளியேறினர். பக்தர்கள்கைகூப்பி நின்றனர்...!

* * *

இதேது புதிய புராணம் என்று எண்ணுகிறீர்களா?

நாம் மேலே குறிப்பிட்டிருப்பது சென்ற வாரப் பத்திரிகைகளில் வந்திருக்கும் 'செய்தி'. டெல்லி விமான நிலையத்திலே வந்திறங்கிய பெரியவர் ஒருவருக்கும் அந்த விமான நிலையத்திலே வந்தவர்களை வரவேற்று உபசரிக்கும் பணியிலிருக்கும் வாலிபனுக்கும் நடந்த முதல் சந்திப்பைத்தான் மேற்கண்டபடி பத்திரிகை செய்தி ஒன்று விவரித்திருக்கின்றது.

விபூதி மேனியுடைய சாமியார் காவிதாரி இல்லை. வெள்ளை அங்கி உடுத்திய குடும்பஸ்தர்தானும். திண்டுக்கல்லுக்கடுத்த பன்றிமலையடம்.

விமான நிலையத்திலே அற்புதம் நிகழ்த்திய சாமியாரைக் காணச் சில மந்திரிகள், பல பாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள், பல ஐ. ஏ. எஸ்., ஐ. சி. எஸ். ஆபீசர்கள்எல்லோரும்சென்றிருக்கின்றனர். வெளிநாட்டுத்தூதுவர்களைக்காணக் கூட நேரம் காணுத ராஷ்டிரபதி சாமியாரை அழைத்து அளவளாவினராம். பன்றிமலை சாமிக்கு பலே அதிர்ஷ்டம்!

பன்றிமலைச் சாமியோடு அரசின் தலைவர் அளவளாவிக்கொண்டிருக்கும் அதே நேரத்தில் அரசின் முதலமைச்சர் நேரு பண்டிதர் வேறோர் பணியில் ஈடுபட்டிருக்கிறார்.

ஜீவராசிகளின் பழமையைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் விஞ்ஞான வல்லுநர்கள் பலர்கூடித் தங்கள் ஸ்தாபனத்திற்கென்று ஒரு பத்திரிகை ஆரம்பித்திருக்கின்றனர். அதற்கு முகவுரை எழுதும் வேலையில் நேரு பண்டிதர் ஈடுபட்டிருக்கிறார்.

உலகம் முதலில் பிழம்பாக இருந்தது. நாளடைவில் அது கொஞ்சம் கொஞ்சமாக ஆறி, குளிர்ந்த பாகங்களில் சதுப்பு நிலங்கள் தோன்றி, அந்தச் சதுப்புகளிலே ஜீவராசிகளும் தோன்றின. பல மாற்றங்கள் நிறைந்த உலகம் உற்பத்தியாக, கோடிக்கணக்கான ஆண்டுகள் ஆகியிருக்கின்றன.

பாறைகளுக்கிடையே ஐக்கியமாகி கிடக்கும் எலும்புக்கூடுகள், காடுகளுக்கிடையே பூமிக்கடியில் தங்கி இருக்கும் புழுக்களின் பாகங்கள், கடலுக்கடியில் இருந்து கிடைக்கக் கூடிய விசித்திரப் பிறவிகளையெல்லாம் சேகரித்து அவைகளுடைய காலங்களை நிர்ணயம் செய்வதும், அவைகளுக்கும் மனித பரம்பரைக்கும் உள்ள தொடர்பை ஆராய்வதும் இந்தச் சங்கத்தின் வேலை. இந்தச் சங்கத்தின் பிரசுரத்தை புகழ்ந்து எழுதப் புறப்பட்ட நேரு பண்டிதர் விஞ்ஞானிகளையும், அவர்கள் இதுவரை உலகுக்கு அளித்துள்ள அரிய சாதனங்களையும் பாராட்டியிருக்கிறார். அதோடு விடவில்லை. விஞ்ஞானத்தின் சாதனைகளை அனுபவிக்கும் நம் மக்கள் அவைகளின் மேன்மையை அறியாதவர்களாயும், அவைகளைக் கண்டுபிடித்தவர்களுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுக்காததையும் கண்டு சற்று கோபமடைந்து "விஞ்ஞானத்தை நம்மில் பலருக்கு புரிந்துகொள்ள முடியாமலிருக்கலாம். ஆனாலும், அதை வாழ்த்தி வணங்கவேண்டும்" என்று ஆத்திரமும், ஆவேசமும்கொண்ட குரலில் கூறி இருக்கிறார்.

இப்படி ஒரே நாள் பத்திரிகையில் பன்றிமலைசாமியாருக்கு பாத பூஜை செய்யும் செய்தியும், நாட்டின் மக்கள் விஞ்ஞானத்தை வாழ்த்தி, வணங்க வேண்டுமென்று கூறும் செய்தியும் படிக்கும் நாம் திகைப்பில் தள்ளப்படுகிறோம்.

விஞ்ஞானம் குறித்து விசேஷ கவனம் செலுத்தும் நேரு பண்டிதருக்கு இது தெரியாதா? தெரிந்தும் ஏன் இத்தகைய போக்கு 'பெரிய இடத்தில்' இருக்கக்கண்டு, கண்டித்துத் திருத்த முற்படாமலிருக்கிறார்!

பன்றிமலை, திண்டுக்கல் அருகே இருக்கிறது—இந்தச் சாமியார் பன்றிமலையார் என்று டில்லியிலிருந்து 'சேதி' வருகிறது, இங்கு உள்ளோருக்கு!

இங்கு உள்ளோர் கண்டனரோ—கேட்டதுண்டோ இந்த 'அற்புதவான், பற்றி? இல்லை!

நேபாளிபாபா என்றும் முருகனை வழிபடும் சேவல்என்றும் பானிவாலா மகாராஜ் என்றும் கிருஷ்ணுவதாரம் என்றும் அவ்வப்பொழுது கிளப்பி விடப்படும் 'கபடம்' அவ்வளவும் இங்கு செலாவணியாகிறது. நேரு பண்டிதரோ இந்த அஞ்ஞானத்தை ஒழித்திட முனைவதில்லை—விஞ்ஞானம் வளரவேண்டும் என்கிருர். வளருமா!

பன்றிமலைச் சாமியார் பண்டித நேருவுக்குச் 'சவால்' கூறுவதுபோல டில்லி சென்றிருக்கிருர். பண்டிதர் என்ன செய்யப்போகிருர்?

★

காஞ்சீபுரம்

7—10—'56

தம்பி !

தூத்துக்குடி சென்றிருந்தேன், துயரக் கடலில் வீழ்ந்து உழலும் நம் தோழர்களைக் கண்டு ஆறுதல் கூற; ஆனால் எனக்கு ஆறுதல் அளியுங்கள் என்றுதான் என்னால் கேட்க முடிந்தது.

சாமியின் திருமணக் கோலத்தைக் கண்டு களித்து, வாழ்வில் எல்லா இன்பமும் எய்தி மகிழ்ந்திடவேண்டும் என்று வாழ்த்துரை வழங்கச் சென்றிருக்கவேண்டிய நான், தம்பி தகுதியும் திறமையும் படைத்தவன், அஞ்சா நெஞ்சன், ஆற்றல் மிக்கோன், ஏழையின் இதயத்தை நன்கு அறிந்தவன். மாளிகையில் மந்தகாச வாழ்வு நடாத்திக்கொண்டு குடிசை வாழ்வோரின் குமுறல் குறித்துப் பேசி உருகிடும் போக்கினன் அல்ல, அவர்களோடு கலந்து உறவாடி அவர்தம் கஷ்ட நஷ்டம் இன்னது என்று கண்டறிந்தவன், பாட்டாளி ஆலையில் வெந்து கருகுவதையும், உழவன் உழைத்து உருக்குலைந்து போவதையும், நடுத்தரக் குடும்பங்கள் வாழ்க்கைத் தொல்லை எனும் சுமையைத் தாங்கமாட்டாமல் குனிந்து போயிருப்பதனையும் கண்டு குமுறும் நெஞ்சினன், இவர்தம் இன்னலைத் துடைத்திடவேண்டும் என்ற பேரார்வம் கொண்டுமட்டுமல்ல, துடைத்திட இயலும் என்ற நம்பிக்கையுடன் பணியாற்றி வரும் உத்தமத் தொண்டன், மேதா விலாசத்தைக் காட்டுவதற்காக 'மேடை' ஏறுபவனல்ல, பொதுநலத் தொண்டாற்ற வேண்டும் எனும் எண்ணத்துடன் பேசும் போக்கினன், மக்களின் வாழ்வு செம்மை பெற எது செயல் வேண்டும், எங்ஙனம் அதனைச் செயல் வேண்டும் என்ற முறை அறிந்து ஓயாது உழைத்து வருபவன், அத்தகைய சாமி, உங்கள் தொகுதியின் உறுப்பினராகி, சட்டசபையில் வீற்றிருந்தால், உமக்கு உற்ற குறை எல்லாம் தீரும், நலன் பல வந்து எய்தும், என்று எடுத்துக்கூறி ஆதரவு திரட்டிட தேர்தல் கூட்டத்தில் சென்று பேசிட வேண்டிய நான், காலத்தின் கொடுமையை என்னென்பது, சாமியின் சவக்குழியைக் காணவும், அங்கு நின்று பேசவும், அனுதாபக் கூட்டத்தில் கதறவும் வேண்டியதாயிற்று. என்மீது தீராப்பகை கொண்டோரும், இந்த அளவுக்கு என்னை வாட்டி வதைத்திருக்க முடியாது. சவக்குழியைக் காணச் சென்றேன்—சண்டமாருதம் என்றனர் சாமியின் ஆர்வம் கண்டோர், சளைக்காத உழைப்பாளி என்றனர் அவன் அல்லும் பகலும் அயராது பாடுபடக் கண்டோர், நகராட்சி மன்றத்திலே உறுப்பினராக அமர்ந்து நற்பணியாற்றி வரும் திறம் கண்டு வியந்து பாராட்டினோர், அத்தகைய என் தம்பியின், சவக்குழியைக் காணச் சென்றேன்—கண்ணீரைச் சுமந்து கொண்டு சென்றேன்—வெடித்துவிடும் நிலையிலிருந்த இதயத்தோடு சென்றேன்—எந்த தூத்துக்குடிக்கு நான் சென்றால், அண்ணா! என்று வாய் நிறைய அழைத்து, வாஞ்சனையுடன் பேசி மகிழ்ந்து மகிழச் செய்வானோ அந்தத் தம்பியின் சவக்குழியைக்

# ★ காடு இது-நாடு அல்ல!

காணச் செல்வது என்றால், இதனைவிட எனக்கு நேரிடக்கூடிய கொடுமை வேறு என்னவாக இருக்கமுடியும்? சென்றேன், கண்ணீர் வெள்ளத்தில் உழலும் தோழர்களைக் கண்டேன், கண்ணீர் வடித்தேன், கண்ணீர் வடித்தனர்.

தூத்துக்குடி செல்லும் பாதை நெடுக, நான் பன்முறை சாமியுடன் சென்ற நினைவுகள், அப்போதெல்லாம் கழகம் குறித்து நடத்திய உரையாடல்கள், ஆங்காங்கு உள்ள கழகத் தோழர்களைக் கனிவுடன் சாமி இன்னின்ன காரியத்தை இப்படி இப்படிச் செய்யுங்கள் என்று பணித்திட்ட பாங்கு, ஆகிய நினைவுகள் என் நெஞ்சில் எழும்பின, வாட்டி வதைத்தன. சாமி மறைந்துவிட்டார்—மாவீரன் கொல்லப்பட்டார்—மாபாவிகள் அந்தக் காளையை வெட்டிச் சாய்த்துவிட்டனர்—சாமி இல்லை, சவக் குழியை அல்லவா காணச் செல்கிறோம் என்று எண்ணிய உடனே, நெஞ்சில் பெருநெருப்பு தோன்றும் — ஆறுதல் பெற எண்ணி இப்பக்கம் திரும்பினால், அழுத கண்களுடன் நடராசன், பிறிதோர் பக்கமோ, மனம் குலைந்த நிலையில் மதுரை முத்து—ஒருவருக்கொருவர் ஆறுதல்கூறிக்கொள்ள முடியாத நிலையில் இருந்தோம். என் செய்வது. நமது கழகம் தோன்றி வளர்ந்து வரும் இந்த எட்டு ஆண்டுகளில், பலப்பல கொடுமைகளுக்கு ஆளானோம்—மனம் பதறப்பதறப் பழி மொழியும் இழி சொல்லும் வீசினர்—எத்தனையோ விதமான தாக்குதல்களை நடத்தினர்—இழப்புகள் பல—இடிகள் ஏராளம்—ஈனத்தனமான செயல் புரிகிறோமே, அடுக்குமா என்ற எண்ணமுமின்றி, பகை கொப்பளிக்கும் உள்ளத்தினர் எதை எதையோ செய்தனர்—நமது தோழர்களைத் துப்பாக்கியால் சுட்டுக் கொன்றனர்—தம்பி! —இவை எதுவும் சாதிக்க முடியாததை இந்தப் பேரிடி சாதித்துவிட்டது—வேதனை என்றால் எப்படி இருக்கும் என்பதை நமக்குக்காட்டிவிட்டது. யாருடைய திருமணப் பந்தலுக்கும் வெற்றி விழாக் கூட்டத்துக்கும் நான் சென்று களிப்பும் பெருமையும் பெற்றிருக்க வேண்டுமோ, அந்தச் சாமியின் சவக்குழி கண்டேன். தம்பி! தம்பி! என்று பரிவுடன் பாசத்துடன் சொந்தம் கொண்டாடினேன்—என் தம்பி சவக்குழி சென்றுவிட்டான் — தவிக்கிறேன் — தவிப்பு தீரவுமில்லை, குறையவுமில்லை—என்றைக்கேனும் தீருமா என்று ஐயமே கொள்ளவேண்டி இருக்கிறது.

சாமியிடம் சொன்னால் காரியம் முடிந்துவிடும்.

சாமியால் மட்டுமே இந்தக் காரியத்தைச் செய்து முடிக்க முடியும்.

சாமிக்குத்தான் இந்தக் காரியத்தைச் சாதிக்கும் ஆற்றல் உண்டு.

சாமி சாதித்த வெற்றி இது காணீர்.

சாமியின் திட்டப்படி இந்தக் காரியம் துவக்கப்பட்டது — அதனால் வெற்றி கிட்டிற்று.

இவ்விதம் பேசாதவர் இல்லை—பேசும்போது அலாதியானதோர் மகிழ்ச்சிகொள்ளாதார் இல்லை. வாழ்க்கையை அர்ப்பணிப்பது என்று பேசுவர்; பலர் விஷயத்திலே அது ஆர்வத்தினால் பிறந்திடும் அன்புரை என்றோ, வெறும் சொல்லலங்காரம் என்றோ மட்டுமே கூறப்பட வேண்டும் — சாமியைப் பொறுத்த மட்டில், அந்தப் பேச்சு முழுக்க முழுக்க உண்மை. ஒவ்வொரு நாளும், நாளில் ஒவ்வொரு மணி நேரமும், தொண்டு—தொண்டன்றி வேறில்லை—கழகத் தொண்டு, பாட்டாளிகளுக்கான பணிமனை அமைக்கும் தொண்டு—பள்ளிக்கூடம் நிறுவும் தொண்டு—நகராட்சிக்கான நற்றொண்டு —என்று இப்படி வகை வகையாக இருக்கும்—தொடர்ந்து நடந்தேறி வரும். ஒரு காரியம் வெற்றியானால் மற்றொன்று, அது வேறோர் காரியத்தைத் துவக்க வழி காட்டும் —இப்படி இடைவிடாது தொண்டாற்றி வந்த இளவல் சாமி. காதகரின் கத்தி தன் உயிரைக்குடிக்கும் — அதுவும் விரைவில் — என்று முன் கூட்டியே அறிந்து—அந்தக் கொடுமையான முடிவு வந்து சேருவதற்குள், எவ்வளவுக்கெவ்வளவு அதிகமாகத் தொண்டாற்றி, சமூகத்துக்கு நன்மை காணமுடியுமோ அத்தனையையும் விரைந்துசெய்து முடித்து வெற்றி காணவேண்டும் என்று திட்டமிட்டதுபோல, அந்தப் பாண்டிமண்டலப்பாசறைக் காவலன், முன்னேற்றக் கழகத்தின் முன்னணி வீரன், ஆர்வத்தால் உந்தப்பட்டு, செயல், செயல், செயல், என்று ஈடுபட்டிருந்தான்.

நாசகார உலகம் இது! நன்றி கெட்ட நாடு இது! நயவஞ்சகர் கொட்டமடிக்கும் காலம்! நல்லது செய்பவரை நாசமாக்கும் நச்சு நினைப்பினர் உலவும் காடு இது—நாடு அல்ல! நன்றி கூறவேண்டியவர்கள், நட்பு காட்டவேண்டியவர்கள், பாராட்ட வேண்டியவர்கள், பரிவுகாட்ட வேண்டியவர்கள் இவர்களே, நற்றொண்டு ஆற்றும் நல்லோனை, வெட்டுவர் குத்துவர், கொல்வர்—என்று அறிந்ததாலோ என்னமோ, நமது சாமி, அந்த நாசகாலர்கள் தன்மீது பாய்ந்து சாய்க்கு முன்பு, நம்மாலான நல்ல காரியமனைத்தையும் செய்து முடித்துவிட வேண்டும் என்று துடியாய்த் துடித்து செயலில் ஈடுபட்டான். வயது முப்பதாகி ஈராண்டுகளே உருண்டன—சவக்குழி புகுந்துவிட்டார் சாமி. அவர் ஆற்றலால் வீரரான, உறுதியுடன் பாடுபடும் பண்பாளர்களான, ஊருக்கு உழைக்கும் உத்தமர்களான, கட்டிளம் காளைகள் ஆயிரக் கணக்கில் அழுது நிற்கின்றனர் — அந்த ஆற்றல்மிக்கோன் சவக்குழி சேர்ந்துவிட்டான். கொடுமையாளர்களால் கொலை செய்யப்பட்டு, மறைந்தான்—கொப்பளிக்கிறது கண்ணீர்.

"அண்ணா—" என்றனர் அழுகுரலில்—சூழவந்து நின்ற தோழர்கள்—நான் என்ன சொல்லுவேன்.

நோய்நொடியால் இறந்துபட்டார் என்றால், தக்க மருத்துவம் பார்த்திடவா இயலாது போயிற்று? என்று கேட்பேன். இறந்துபட்ட சாமிக்கு அறுபது வயது என்றால் பழம் கீழே உதிர்ந்தது, பதறி அழுது என்ன பயன் என்பேன், காட்டுமிருகங்கள் அவர் உடலைக் கிழித்தெறிந்து உயிரைக் குடித்தது என்றால், வேட்டையாடி அவைகளை வீழ்த்திடும் வீரம் உமக்கு எங்கே போயிற்று என்று கேட்பேன், அடக்கு முறைக்கு

(14-ம் பக்கம் பார்க்க)

# தணலில் தங்கம்

3

**ம**று நாள் பிற்பகல் செங்கமலக் கிழவியை எதிர்பார்த்துக் கொண்டே இருந்தேன். நேற்றுவந்த நேரத்தில்தானே இன்றும் வருவாள் என எண்ணினேன். அவள் வருவதற்குள் ஓரகத்தி வெளியில்போய்விட்டால் நல்லது என நினைந்து அவள் என்ன செய்து கொண்டிருக்கிருள் என நொடிக்கொருமுறை பார்த்த வண்ணம் இருந்தேன்.

நாள்தோறும் மூன்று மணிக்கெல்லாம் அலங்கரித்துக்கொண்டு வெளியேறிவிடும் ஓரகத்தி அன்று என்னவோ பாயை விரித்துப் படுத்துவிட்டாள். மணி மூன்றும் ஆயிற்று, மூன்றரையும் ஆயிற்று. படுத்தவள் எழுந்திருப்பதாகவே தெரியவில்லை. முகத்திலோ கவலைக் கோடுகளும் கலவரத்தின் அறிகுறிகளும் காணப்பட்டன. மோட்டு வளையையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருந்தாள்.

இனிச் செங்கமலம் வந்தாலும் அவளிடம் நாம் பேசவே இயலாது என்று எண்ணி நான் சலித்துப் போனேன். வெளியே போகும் ஓரகத்தி வீட்டிலே இருக்கக் கூடாதா என்று நேற்றுவரை என்மனம் எண்ணி ஏங்கியது. ஆனால் இன்று அது அவள் வீட்டில் இருப்பதைத் துன்பமாக எண்ணி வருந்துகின்றது. இன்று துன்பமாக இருக்கும் நிகழ்ச்சி மறு நாள் இன்பமாக மாறுகின்றது. எல்லாம் நினைப்பில் நேருகின்ற மாற்றங்கள்தான். மனமே விசித்திரமான ஒன்று. அதன் போக்கில்தான் என்னென்ன மாறுதல்கள்!

ஓரகத்தி வீட்டில் இருக்கும்போது செங்கமலம் வராமல் இருப்பதே நல்லது; வந்தால் பகை முற்றும் என்று எண்ணி இருந்தபோது அந்தக் கூனல் கிழவி வந்துவிட்டாள். வந்தவள் ஓரகத்தியைக் கண்டதும் கொஞ்சம் பின்வாங்கினள் என்ருலும், நிலைமையை உணர்ந்துகொண்டு அவளிடம்பேச்சைத்தொடங்கினள். ஆனல் ஓரகத்தி ஒட்டாமலே பதில் சொல்லிக்கொண்டுவந்தாள்.

''நேற்று வந்திருந்தேண்டி அம்மா. உன்னைக் காணும்; எங்கே போயிருந்தே?'' என்று அந்தக் கிழவி கேட்டதும் இதுவரை அடங்கிக் கிடந்த ஓரகத்தி ஆர்த்தெழும் பெண்புலியாக மாறிவிட்டாள்.

''எங்கேயோ போனேன், எதற்கோ போனேன். அதைப்பற்றி உனக்கென்ன? உன் வீட்டு வேலையைப் பார்த்தால் போதும். எங்கள் வீட்டுச் செய்திகளில் தலையிடவேண்டாம்'' என்று சுடு சொற்களை வீசினள்.

அதைக்கேட்ட கிழவியின் முகத்தில் ஒரு மாறுதலும் நிகழவில்லை. சற்று நேரம் மோனமாக இருந்துவிட்டு ''வருகிறேண்டியம்மா, என்னமோ தள்ளாத வயது, மனசு கேக்கலே'' என்று சொல்லிவிட்டு ஈரமான தன் குழிக் கண்களைத் துடைத்தவாறு வெளியேறினள்.

செயற்கருஞ்செயல் செய்துவிட்டதைப் போன்ற பெருமிதத்தால் ஓரகத்தி எழுந்து தோட்டத்துப் பக்கம் போனள்.

நான் இந்த நாடகத்தைப்பார்த்துச் செயலற்றுப் போனேன்.

கிழவியின் பொறுமையை எண்ணி எண்ணி வியந்தேன். ஓரகத்தியின் சுடுசொற்களைச் செவிமடுத்தபின்னும் கோபம்கொள்ளாது சாந்தம் தவழ்ந்த முகத்தினளாகி அன்புடன் பேசினள். அவளை என்னென்று சொல்வது? இந்தக் குடும்பத்திற்கு அவள் பகையுடையவள் என்று கணவர் கூறியதையும் என் மனம நம்ப மறுத்தது. அந்தக் கிழவியிடம் எனக்குத் தனி மதிப்பே உண்டாயிற்று.

சாதாரண கேள்வியைக் கேட்டு ஏன் ஓரகத்தி அப்படிச் சீறிப் பாய வேண்டும் என்று எண்ணி எண்ணிப் பார்த்தேன். வெளியில் போவது, குடும்பத்துச்செய்தி என்ருனே. குடும்பத்துச் செய்தி வெளியில் இருப்பானேன். அதைக் கேட்டால் கோபம் கொந்தளிப்பானேன் என்று பலவித வினக்களுக்கு விடை காண இயலாமல் தவித்துப் போனேன்.

என் நெஞ்சு திடுக்கிடக் கூடிய செய்தி ஏதோ இருக்கிறது. அதை எல்லோரும் மூடி மறைக்கின்ருர்கள் என்று மட்டும் என் உள்ளத்தின் மூலையில் ஒரு உணர்வு அரித்துக் கொண்டே இருந்தது, இந்த நிகழ்ச்சிக்குப் பிறகு.

செங்கமலம் மீண்டும் வந்துபோன செய்தியைக் கேட்டதும் கணவர் அடிபட்ட வேங்கையானர், உண்கலத்தைத் தூக்கி அடித்தார்.

''சொன்ன பேச்சைக் கேட்பதில்லை, சனியன், அடங்காப்பிடாரி'' என்றெல்லாம் என்னைத் தூற்றினர். அன்றிரவு படுக்கை அறைக்கு வராமல் தெருத்திண்ணையிலேயே போய்ப் படுத்துக்கொண்டார்.

ஓரகத்தியின் கடுத்த முகம் என்னைக் கண்டபோதெல்லாம் மேலும் கடுத்தது. வெறுப்பை வாரிக் கக்கியது.

கணவருடைய அண்ணனே ஏதும் அறியா அயலவர்போல் வீட்டின் திண்ணை மீது எப்போதும்போல் குறட்டை விட்டுக்கொண்டிருந்தார். வீட்டில் இவ்வளவு ஆட்டங்களும் ஆர்ப்புகளும் நடைபெறுகின்ற போது அமைதியாகத் தூங்கப் போய் விட்டாரே, குடும்பத்துக்குப் பெரியவர் 'ஏன்?' 'என்ன?' என்று கூடவா கேட்கக்கூடாது என்று அப்போது தான் அவர் மீது எனக்குக் கொஞ்சம் கோபம் ஏற்பட்டது. ஆனலும் அது உடனே தணிந்துவிட்டது.

மனைவியின்கொடுமைக்கு அடங்கும் பழக்கமாக இருக்கலாம்என நினைந்து ஆறுதலடைந்தேன்.

மறுநாள் முதல் வீடே புது வகையாக மாறிவிட்டது. எப்போதோ ஒருமுறை என்னுடன் பேசி வந்த கணவர் பேசுவதையேவிட்டுவிட்டார். ஓரகத்தி, நான்ஒருத்தி வீட்டில் இருக்கிறேன் என்பதையே அறியாதவள் போல நடக்கத் தலைப்பட்டுவிட்டாள். எனக்கோ என்ன செய்வது என்றே

மா. கி. தசரதன்

தெரியாது போயிற்று. என் நிலையை யும் காரணமறியாது பகையாகக் கரு தப்படும் போக்கையும் எண்ணிக் கண்ணீர் வடிப்பதே வேலையாயிற்று.

அந்தக் கண்ணீர் வடிக்கும் செய லும் கூடாது என்று வைதாள் ஓர கத்தி. நேராக என்னைப்பார்த்து "ஏன் தங்கம் அழுகிருய்? அழாதே கண்ணே" என்ற அன்பான சொற் களை அவளிடம் நான் எதிர்பார்க்க இயலாதுதான். ஆனால் 'அழாதே, இங்கே யார் உன்னை என்ன சொல்லி விட்டார்கள் என்று நீலிக்கண்ணீர் வடிக்கின்ருய்?" என்ருவது என்னை அச்சுறுத்தி அடக்கி இருக்கலாம். அதைக்கூடவா நான்பெறக்கூடாது?

எங்கேயோ யாருக்கோ சொல்வது போல் "வாழுகின்ற வீட்டில் அழு வது என்ன அநியாயம்! இங்கே யார் சாகவேண்டும் என்று எண்ணமோ தெரியவில்லையே" என்று சுவரைப் பார்த்தும் தூணைப்பார்த்தும் சொல் லத் தொடங்கினுள்; இல்லாத பழியை எடுத்து என் மீது வீசினுள்.

ஒருநாள் கணவரிடத்தில், நான் சதா அழுவதாகவும் அதைத் தடுக்க வேண்டும் என்றும் சொல்லிவிட்டாள்.

"வீட்டிற்கு வந்தால் கொஞ்ச நேர மாவது நிம்மதி கிடையாது, சனியன் ஏன் அழுது தொலைக்கிருய்? இங் கிருக்கப் பிடிக்கவில்லை என்ருல் உன் தாய் வீட்டிற்காவதுபோவதுதானே" என அவரும் சேர்ந்து வைதார்.

அன்று காலை தலைவலி சொல்ல இயலா வகையில் வாட்டியது. வாயெல்லாம் ஒரே குமட்டல், வாந்தி வேறு எடுத்தேன். நான் வாந்தி எடுத்ததை ஓரகத்தி பார்த்தும் பாரா ததுபோல் போய்விட்டாள். உதவிக்கு வரவேண்டும் என்ற எண்ணமே இருக்காதா?

அம்மாவால் இப்படி இருக்க முடி யுமா? ஒருமுறை இப்படித்தான் திரு விழாவில் நான் ஏதோ வாங்கித் தின்றுவிட்டு வீட்டில் வந்து வாந்தி எடுத்தபோது அம்மா பதறிப் போனுள். வாந்தி எடுத்தபோது தன் இரு கைகளாலும் என் தலையை அழுத்திப் பிடித்துவிட்டாள். அந்த அம்மாவின் அரும் புதல்வியாக வளர்ந்த நான் இங்கே இந்த உலர்ந்த உள்ளமுடைய ஓரகத்தி யிடம் படாதபாடு படுகின்றேன்.

கணவருடைய தூற்றுதலும்சேரவே என் மனம் அலமந்தது, தலை சுற்றி, மயக்கம் வேறு வரும்போலிருந்தது: மயங்கிவிட்டிருப்பேன் என்று தான் நினைக்கிறேன்: நின்றுகொண் டிருந்த நான் எப்போது கீழே உட் கார்ந்தேன் என்று தெரியவில்லை. என் பக்கத்தில் ஒரு செம்பில் தண் ணீர் மட்டும் வைக்கப்பட்டிருந்தது. என்னைச் சுற்றிலும் நீர் துளிகள் சிந்திக்கிடந்தன.

'எல்லாம் பாசாங்கு, இந்த வயதில் என்ன சூழ்ச்சி பார்; மயக்கமாம் மயக் கம்" என்று உள்ளறையிலிருந்து ஓரகத்தியின் குரல் மெல்லிய இழை போல் வந்து என் காதுகளில் நுழைந்தது.

பாசாங்காமே பாசாங்கு. ஐயோ பெண்ணே, உன் அறிவு ஏன்தான் இப்படிக் கெட்டுப் பாழ்பட்டுக் கிடக் கின்றதோ தெரியவில்லையே. நான் உனக்கு என்ன ஊறு செய்தேன்? உண்ணும் சோற்றை அள்ளிக் கொண்டேனு, பருகும் நீரைத் தட்டிப் பறித்தேனு, என்ன செய்தேன்? ஏதும் செய்யாது இருக்கிறபோதே நீ ஆடுகின்ற ஆட்டமும், இருகிற ஆர்ப் பும் அம்மம்ம நினைத்தாலே நெஞ்சம் நடுங்குகின்றது. பெண்களுக்கு இரக்கம் இயற்கைச் சொத்து என்பார் களே. உன்னைப் பொறுத்தவரையில் அது கற்பனைதானு? நான் பாசாங்கா போடுகின்றேன். ஐயோ பெண்ணே, உன்னைச் சொல்லி என்ன பயன். உனக்குத்தான் அந்த அநுபவமே இல்லையே. உனக்கெப்படித் தெரியும். நான் இரண்டு மாதங்களாகத் தலை முழுகவில்லையடி, தலைமுழுகவில்லை" என்று கூக்குரல் இட்டுக் கதற வேண்டும் போல் இருந்தது.

உடலில் அதற்கு வேண்டிய ஆற் றலோ மனதில் துணிவோ அற்று இருந்தேன்.

மெல்லத் தலையைத் திருப்பிக் கண்ணிமைகளை உயர்த்தி வாயைத் திறந்து பரிதாபமாகப் பார்க்கத்தான் முடிந்தது என்னுல்.

மாலை தண்ணீர் கொண்டுவர குளத் திற்குப் போனபோது தெருக்கோடி யில் இருந்த பள்ளிக்கூடத்துத் திண்ணையைப் பார்த்தேன்.

தண்ணீர்க் குடம் எடுத்துப்போகும் போதும் வரும் போதும் அந்தப் பள் ளிக்கூடத்தைப் பாராமல் போக முடிவ தில்லை என்னுல். மணம் இருப்பதும் மணம் இல்லாமல் எழில் மட்டும் காட்டிக் காய்ந்து சருகாய்க் கருகிப் போவதுமாகப் பல வகையில் அழகு ஒழுகும் வண்ணப் பூஞ்செடிகள் மலிந்தது அந்தப் பள்ளிக்கூடத்து முன்னிடம். எழிற்காடாய்க் கிடக்கும் அதனைப் பார்க்கும் போது என் இன் னல் எல்லாம் மறைந்து இதழ்க் கோடி கொஞ்சம் நெளிய இளநகை ஒன்று தோன்றும். "பாவம் பூக்கள்! தோன்றி அழிவது தவிர வேறு என்ன காணுகின்றன வாழ்க்கை யில்?" என்று எண்ணுவேன்; இரங்கு வேன்.

ஆனுல் மறுகணமே என் சிந்தனை வேறு திசையில் சென்றுவிடும். "அவையாவது கண்டார்க்குக் களிப் பூட்டுகின்றன. அவற்றை வெறுப் பாரும் இல்லை, பகைப்பாரும் இல்லை. ஆனுல் நீயோ... வெறுக்கப்பட்டும்... பகைக்கப்பட்டும்..." என்று எண்ணி வருந்துவேன்.

வழக்கம்போல் அன்றும் அப்படித் தான் மலர்த்தோட்டம் பார்க்கின்ற போது பள்ளிக்கூடத்துத் திண்ணை யையும் பார்த்தேன். வெளியூருக்கு மாற்றலான பள்ளிக்கூடத்து ஆசிரி யர் விடுமுறையில் வந்திருப்பதாகச் சொன்னுர்கள். அவர் இருப்பாரோ என்று எண்ணித் தலைநிமிர்ந்தபோது அங்கே யாரோ இளைஞன் ஒருவன் இருக்கக் கண்டேன். நொடிப் பொழுது உற்றுப்பார்த்தேன். தெளி வாக விளங்கவில்லை. யாராக இருந் தால் என்ன என்று மேலே நடந்து குளத்தின் துறையை அடைந்தேன்.

எனக்கு முன்னமே அங்கே இரண் டொரு பெண்கள் வம்பளந்து கொண்டு நீர் முகக்கும் பணியில் ஈடு படாமலே இருந்தனர். வட்டமான தாமரை இலைகள், அவற்றிடையே மனங் கவரும் மலர்கள், மலர் முற்றி மாறிய காய்கள், உலர்ந்து சருகான இலைகள், பச்சைப்பசேல் என்ற வேலம் பாசை ஆகியவை அழகின் அருட்செல்வங்களாய் அத்தடாகத் தில் பொலிந்தவைகளையே வேடிக்கை பார்த்துக்கொண்டு குடத்தைக் கழு விக்கொண்டிருந்த என் மனம், இடை யிடையே அவர்கள் பேசியதையும் உட்கொண்டது. சுவைக்காத அப் பேச்சின் இடையில் சற்று நேரத்திற்கு முன் நான் அறியாது திகைத்த புதிர் ஒன்றும் விடுவிக்கப் பட்டது.

"பார்த்தாயாடி. பச்சையம்மாவின் தம்பியை, முன்னே இங்கிருந்து போனபோது பையன் எலும்பும் தோலுமாக வற்றலாய் வாடி இருந் தான். இப்போது..."

"அவனுக்கென்னடியம்மா நன்ரு கப் படித்தவன். நிறைந்த சொத்து. திருமணம் கூட நிச்சயமாகிவிட்ட தாம்"

என்று இவர்கள் பேச்சைக்கேட்டு யாரைப் பற்றியோ என்று எண்ணிய போது...,

"அவன்தானுடி அது, அங்கே பள்ளிக்கூடத்துத் திண்ணை மீது? நான் யாரோ என்று நினைத்தேனே"

என்று மூன்ருவதாக ஒருத்திகுறுக் கிடவும் "ஆமாம்" என்ருள் முதலவள்.

"பெண் எங்கே? எவ்வளவு சொத்து? அண்ணன் தம்பி உண்டா?" என்றெல்லாம் அவர்கள் தொடர்ந்து விவாதித்துக்கொண்டிருந்தார்கள். என் மனம் எங்கோ பறந்து திரிந்து கொண்டிருந்தது.

படித்தவன் என்கிறார்கள். பண்புடையவனாக இருப்பான். மனைவிக்குச் சமநீதி தந்து நடத்துவான், யாருக்கு அந்தப் பேறோ? நம்மைப் போல் அவள் இடர்ப்பட நேராது என்று எண்ணிக்கொண்டே வீடு வந்து சேர்ந்தேன்.

அடுத்த நாள் பிற்பகல் எச்சில் இலையைத் தோட்டத்து மூலையில் எறிந்துவிட்டுத் திரும்பும்போது எலுமிச்சை மரத்தின் ஓரத்தில் அந்த இளைஞன் நிற்கக் கண்டேன். இங்கு என்ன வேலை இருக்கும் அவனுக்கு என்று நினைத்துவீட்டுப்பக்கம் திரும்பினேன்.

"ஏன் போகிறாய்? நான் உனக்காகத்தானே நிற்கிறேன்" என்றான் அவன்.

எனக்காக அவன் ஏன் நிற்க வேண்டும்? அவன் யார் என்றும் அறியேன். என்னிடம் அவனுக்கு என்ன பேச்சு என்று தலைநிமிர்ந்து,

"ஏன்?" என்றேன். அவன் தோற்றம் ஆடம்பரத்தைக் காட்டுவதாக இருந்தது.

"சும்மாதான். எல்லோரும் வெளியில் போயிருக்கிறார்களாமே"

ஆம் அப்போது எல்லோரும் வெளியில்தான் போயிருந்தார்கள். சில நாள் வீட்டில் முடங்கிக் கிடந்த ஓரகத்தி மீண்டும் பழைய கதையைத் தொடங்கிவிட்டாள். என்றாலும் "இல்லையே, இருக்கிறார்கள் வீட்டில்" என்றேன்.

"ஏன் பொய் சொல்லுகின்றாய்" என்று சொல்லிய வண்ணம் அவன் நெருங்கி வந்துகொண்டிருந்தான்.

நான் எட்டி எட்டிப் போய்க்கொண்டிருந்தேன். அவனோ விரைவாக வந்தான். அவன் கண்களில் விலங்கு வெறி தாண்டவமாடியது.

"ஏன் தங்கம் என்னிடம் 'பிகு' செய்கிறாய்? எல்லாம் எனக்குத் தெரியும். மறுக்காதே" என்று என் கையைப் பற்றினான்.

எங்கள் வீட்டின் பின்பக்கம் ஆள் நடமாட்டம் அற்ற இடம். அடர்ந்த மரங்களை உடையது. உள்ளே இருப்பது வெளியே தெரியாது. அந்தச் சூழ்நிலையையும், வீட்டில் யாரும் இல்லாத சந்தர்ப்பத்தையும்பயன்படுத்திக் கொண்டு இந்தப்பாவி இழி செயலுக்குத் துணிந்துவிட்டான்.

"அண்ணா விட்டுவிடுங்கள், அண்ணா வேண்டாம், அண்ணா வேண்டாம்" என்று கதறக் கதற,

"அண்ணா முறை என்ன தங்கம் வேண்டி இருக்கிறது? அருமையான முறை வேறு இல்லையா?" என்று பல் எல்லாம் தெரியக்காட்டி வாழைப் பழம் கண்ட குரங்குபோல் இளித்தான் அவன். இனி இந்தச்சண்டாளனிடம் சமாதானம் பேசிப் பயனில்லை என்பதனை உணர்ந்தேன். என் கையைப் பற்றி இருந்த அவன் கையைக் கடித்தேன். எதிர்ப்பை எதிர்பார்க்காத அவன் வலியைத் தாங்காது 'ஆ' என்றலறித் தன் பிடியைத் தளர்த்தினான். உடனே விடுதலையடைந்த கூண்டுப் புள்போல் விரைந்தோடி வந்து வீட்டில் புகுந்து கொண்டு உள்தாளை இட்டுக்கொண்டேன்.



வெறிநாயிடம் இருந்து தப்பி ஓடி வரும் வெண்புறுவின் நிலையில் இருந்தேன், அப்போது நான்.

படித்தவன் பண்புடையவனாக இருப்பான் என்று நேற்றுத்தான் நினைத்தேன். ஆனால் அவனோ காம வெறி கொண்டவனாய்ச் சித்தங்கெட்டுத் தடுமாறுகின்ற கயவனாக இருக்கின்றான். படிப்பாம் படிப்பு. பண்பு தராத படிப்பு என்ன பலன் தரப் போகிறதோ என்று எண்ணி விம்மிக் கொண்டிருந்தபோது கூடத்துச் சன்னலின் கம்பிகளுக்கு இடையே அவன் முகம் மீண்டும் தெரிந்தது.

என்ன விபரீதம் விளையப் போகிறதோ என்று நான் எண்ணிக் கொண்டிருக்கும்போதே,

"மறுக்காதே தங்கம், சொன்னபடி நட என்று மீண்டும் கெஞ்சும் குரலில் அவன் குழைக்கத்தொடங்கினான். என்ன வம்பு இது என்று நினைத்து எழுந்து சென்று உட்பக்கமாக இருந்த சன்னல் கதவுகளைப் பிடித்துக்கொண்டு,

"போய்விடு மடையனே, போய்விடு, வீணாட்டம் ஆடாதே" என்று சொல்லிக் கையில் பிடித்திருந்த கதவுகளை அறைந்து மூடித் தாளிட்டேன். அந்தச் சன்னலின்மீதே சாய்ந்து கொண்டு என் நிலையை நினைந்து நினைந்து வருந்தினேன். கண்கள் நீர்த்தாரை பொழிந்த வண்ணம் இருந்தன.

"இதற்குச் சரியான பழி தீர்த்துக் கொள்ளுகின்றேனடி, 'சிறுக்கி" என்று அந்தப் பித்தன் உறுமிய ஒலி மரப் பலகையையும் ஊடுருவி மெல்ல என் செவியை வந்து எட்டியது.

நான் அவனுக்கு இணங்காததினால் சிறுக்கியாகிவிட்டேன்; அதற்காகப் பழிவேறு பெறவேண்டுமாம்.

மறு நாள் தண்ணீர் முகக்க குளக் கரைக்குச் செல்லும்போது பள்ளிக் கூடத்துத் திண்ணையைக் காணவே அஞ்சினேன்.

"நம் ஊர் பருக்கையும் நீரும் இங்கு வந்த மூன்றும் நாளே உடலில் ஊறிடுகிறதுடா, என்ன ராங்கிடா வருகிறவங்களுக்கு" என்ற குரல் கேலியும் கிண்டலும் கலந்தவாறு அவன் வாயிலிருந்து வெளிப்படவும் அவனுக்கு ஒத்து ஊதும் இரண்டொருவர் "ஆமாமடா ஆமாம்" என்று ஒலிக்கவுமாக பள்ளிக்கூடத்துத் திண்ணையே அமர்க்களம் ஆகிவிட்டது.

எல்லாம் என்னைக் குறித்துத்தான் என்பது எனக்குத் தெரிந்ததுதான்.

மற்ற நாட்களில் கலைக் கூடமாக விளங்கும் இடம் விடுமுறை நாட்களில் இப்படி வீணர் கூடமாகிறதே என்று எண்ணி நொந்தேன்.

அவனுடைய இழிகுணத்திற்கு இடந்தந்து தீச்செயலுக்குத் துணிந்துவிட்டிருந்தால் நடுத்தெருவில் நடக்கின்றபோது கைகொட்டிச் சிரிக்கமாட்டான். ஆனால் நேர்மையை நினைந்து செந்நெறி நடக்க எண்ணினால் கிடைக்கும் பரிசு சுடுமொழிகள். என்ன உலகம் இது! இதுவோ பண்பு!

இந்த அளவோடு நின்றால் நல்லதுதான். ஒருவகையில் பொறுத்துக்கொள்ளலாம். ஆனால் அவனைப் பார்க்கும்போதெல்லாம் என் மனதில் ஏனோ அச்சம் பரவி உடல் நடுங்குகின்றது.

இன்னும் என்ன தீமை இதனால் நேர இருக்கிறதோ!

(தொடரும்)

# சாதனையும் வேதனையும்!

ஒழித்து விட்டோம்!

ஒழித்து விட்டோம்!!

**உணவுப்பற்றாக் குறையை நாட்டை விட்டு ஓட்டி விட்டோம்.**

**முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின், மகத்தான சாதனை. மறுக்க முடியாத சாதனை.**

*

*மருட்சி ஏற்பட்டுவிடும் கேட்போருக்கு! அந்தளவுக்கு நமது மந்திரிமார்கள் செல்லுமிடந்தோறும், தமது ஐந்தாண்டுத் திட்டத்தின் அற்புத சாதனை இது, நாட்டிலிருந்த பஞ்சத்தையும் பட்டினியையும் முதல் திட்டத்தின் மூலம் ஒழித்துக் கட்டிவிட்டோம். அடுத்தது நாட்டை தொழில்புரியாக்குவது தான். அதற்காகவே 2-வது திட்டம் கிளம்ப இருக்கிறது என்று பேசி வருகிறார்கள்!*

*நேரு கூட இதுபோலவே, பேசுகிறார்—பெருமிதங்கொள்ளுகிறார்.*

*அவர்களுக்கெல்லாம் இதோ,* 'கல்கத்தா, *சவால் விடுத்துள்ளது சென்ற செப்டம்பர் 23-ந்தேதி.*

இரயில்கள் ஓடவில்லை!

தொழிலாளிகள் வேலைக்குச் செல்லவில்லை.

நகர் முழுதும் கிளர்ச்சி—ஊர்வலம்.

கலவரம் மூளாமல் கவனிக்க இராணுவமும் போலீசும் தயாராக நிற்க நேர்ந்தது.

*அந்தளவுக்கு அன்றைய தினம், தமது நிலையை எடுத்துவிளக்கியிருக்கின்றனர், மக்கள்.*

*"களஞ்சியம் வழிகிறது! செந்நெல் மூட்டை மூட்டையாகக் கிடக்கிறது!! — என்று நீங்கள் செப்பலாம். ஆனால், நாங்கள் காண்பது என்ன? எப்போதையும் விட மோசமான நிலை! ஏன்? ஏன்?" என்று ஒரு நாள் வேலை நிறுத்தம் செய்து கேட்கிறார்கள் கல்கத்தா மக்கள்.*

*பெருமூச்சு விட்டுவிட்டு, 'தலைவிதி' என்று பாரத்தைப் போட்டுவிட்டு, நாட்களை நகர்த்தமுடியாமல் நேரடி நடவடிக்கையின் மூலம் தமது நொந்துபோகும் நிலையினை எடுத்துக் காட்ட முன்வந்திருக்கிறார்கள்.*

*மூட்டை இழுத்தோ, உடல் தேய உழைத்தோ, ஒரு நாளைக்கு ஒரு ரூபாய் சம்பாதிப்பவன் அதைக்கொண்டு என்னென்ன பொருள்களை வாங்கி வயிற்றைக் கழுவினானோ, அதே பொருள்களை வாங்க இப்போது ஒரு ரூபாய் போதவில்லை அவனுக்கு!*

**விலைவாசி ஏறிவிட்டது.**

**உணவுப் பொருள்களின் விலை முன்பைவிட உயர்ந்து விட்டது.**

*அரசோ, நாட்டில் உணவுப் பொருள் குவிந்துகிடப்பதாக முரசு கொட்டுகிறது! முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் சாதனை இது என்று சங்கநாதம் செய்கிறது! நேருவின் படத்தைப் போட்டு, வளமான கழனிகளையும் காட்டி 'பாரீர்! பாரீர்!' என்று என்று 'சிலைடு' போடுகிறார்கள் சினிமாவில், தமது சிறப்பினை விளக்க!*

*ஆனால், ஏழையோ முன்பைவிட அதிக விலை கேட்கப்படுகிறான்.*

*பொருள், மார்க்கெட்டில் அதிகம் குவிந்துகிடந்தால், விலைமலிவாகத்தானே கிடைக்க வேண்டும்! அதுதானே பொருளாதார நூல் போதிப்பது — வாழ்விலும் நாம் காண்பது.*

*அதிகப் பொருள் குவிக்கப் பட்டுவிட்டதாக அரசு கூறுகிறது! ஆனால், உணவுப் பொருள்களின் விலையோ விஷம் போல ஏறிக் கொண்டிருக்கிறது!*

*கல்கத்தாவில் மட்டுமல்ல இந்திய உபகண்டத்தின் ஒவ்வொரு மூலையிலும் உள்ள நிலைமை இதுதான். கடந்த ஆண்டினைவிட இந்த ஆண்டு, விலைவாசி அதிகமாகியிருக்கிறது.*

*இதுபோல, விலைவாசிகள் திடீரென ஏறுவதும், மக்கள் பொருட்களை வாங்கமுடியாமல் தவிப்பதும், ஒரு அரசின் நிர்வாகத்துக்கே ஏற்படும் சவாலாகும். நமது அரசோ, உணவுப் பொருள்களைக் குவித்துவிட்டோம் என்று கூறுகிறது களிப்புடன்!*

*உண்மை நிலை என்ன? உள்ளபடியே, முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் காரணமாக உற்பத்தி பெருகிக் குவிந்துவிட்டதா? நேருவும் பிறரும், பெருமிதமாகப் பேசுவது சரிதானா? ஏனிப்படி விலைவாசிகள் உயருகின்றன?—என்பது*

குறித்து செப். 23ந் தேதி சென்னையிலே ஒரு விவாத அரங்கு நடத்தினர் — மயிலை பொதுவிவகாரக் கவுன்சில் எனும் அமைப்பின் சார்பில், அதில் கலந்துகொண்டு பேசினராம் பேராசிரியர் டி. கே. துரைசாமி அய்யர் என்பார். விலைவாசி உயர்வின் காரணம் பற்றி அவர் கூறியிருக்கிறார், **“விலைவாசி உயர்வுப் பிரச்னையை சர்க்கார் ஒருவிதமாக அணுகுகின்றனர். உதாரணமாக சில மாதங்களுக்கு முன்னால் நாட்டில் உணவு நிலை திருப்திகரமாக இருப்பதாகவும், 4-லட்சம் டன் அரசி ஏற்றுமதி செய்யலாம் என்றும் கூறினர். 2-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் அரிசி ஏற்றுமதியின் மூலம் ரூ. 400 கோடி கிடைக்குமெனவும் எதிர்பார்த்தனர். ஆனால் இப்பொழுது உணவுப் பற்றாக் குறையாக இருப்பதாகவும், இறக்குமதி செய்ய ஏற்பாடு செய்வதாகவும் சர்க்கார் கூறுகின்றனர். சர்க்காருக்குத் திருப்திகரமான புள்ளி விபரங்கள் கிடைக்காதது காரணமாக இருக்கலாம். ஆகையால் சுதந்திரமாகச் சிந்திப்பது மிகவும் அவசியமாகிறது.**

*புள்ளிவிபரம் சரியாகக் கிடைக்காததால் ஏற்பட்ட கோளாறு இது, ஆகவே சுதந்திரமாகச் சிந்திக்கவேண்டும் அரசாங்கத்திலிருப்பவர்கள் என்கிறார் பேராசிரியர்.*

*அதே அரங்கில் கலந்துகொண்ட தேசீய ஏடாம் ‘இந்தியன் எக்ஸ்பிரசின்’ கூட்டாசிரியர்* கே. ரங்காச்சாரி *என்பாரும், பேராசிரியர் சர்க்கார்மீது விடுத்த குற்றச்சாட்டினை மறுக்கவில்லை. அவரும் பேசியிருக்கிறார்,* **“ஆமாம்! சர்க்கார் செய்த தவறு ஒன்று இருக்கிறது. நாம் உணவு விஷயத்தில் சுயதேவையைப் பூர்த்தி செய்துகொள்ளும் நிலைமையை அடைந்துவிட்டதாக நினைத்து சர்க்கார் அலட்சியமாக இருந்துவிட்டனர். இதன் விளைவாக கடந்த 2, அல்லது 3 வருடங்களில் இறக்குமதியைக் குறைத்துவிட்டனர். 1955-ம் வருடப் பிற்பகுதியிலிருந்து உணவுப் பொருள் விலை உயர்ந்து வருவதற்கு இந்த அலட்சியம்தான் காரணம்”**

*பேராசிரியர், சரியான புள்ளி விபரம் கிட்டாததால் ஏற்பட்ட தவறு என்கிறார்! ஏட்டாசிரியர், அதன் விளைவாக ஏற்பட்ட அலட்சியம்தான் விலைவாசி உயர்வுக்குக் காரணம் என்கிறார்.*

*அதாவது, புள்ளி விபரங்களை அதிகாரிகள் சேகரித்துக்கொடுக்கலாம் அமைச்சர்களே! அதை மட்டும் பார்த்துவிட்டு, நம்பிவிடாமல், உங்களை கண்ணுக்கெதிராகயிருக்கும் நிலைமை என்ன என்பதையும் ஆய்ந்தறிந்து பார்க்க வேண்டும், அப்போதுதான் உண்மையை உணர முடியும் என்றுரைக்கிறார்.*

*நல்லுரைதான் இது! நமது அமைச்சர்களும், நேரு பிரானும் தாம் ‘பொது ஜன மந்திரி’கள் என்பதை விளக்குவதற்காக அடிக்கடி ஒவ்வொரு ஊருக்கும் போய் வருவதாகக் கூறுகிறார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு, நிலைமையை நேரில் உணரும் சாத்தியம் இல்லாமற்போகவில்லை. இருந்தும், இந்த விலைவாசி உயர்வு ஏற்பட்டுள்ளது.*

*“என்ன செய்வது! எவ்வளவோ வேலைப்பளு. அதனால், அதிகாரிகள் கூறும் புள்ளி விபரங்களை நம்பித்தானே, ஆகவேண்டியிருக்கிறது” என்று கூறக்கூடும் தேசிய நண்பர்கள்நேருபண்டிதருக்குஇருக்கிற எண்ணற்றவேலைச்சுமைகளுக்கிடையே, அதிகாரிகள் கூறுவது ஒவ்வொன்றையும் துருவித் துருவி ஆராய முடியாதுதான். எனினும், இப்படியொரு நிலைமை நாட்டிலேற்பட்டிருப்பதைக் கண்டபின்னரும், எதிர்பார்த்ததற்கு நேர்மாறாக கழனிகள் விளையவில்லை, களஞ்சியம் நிரம்பவில்லை ‘மாயமானை’ நம்பினோம் இதுவரையில் என்று உணர்ந்த பின்னரும் என்ன செய்யவேண்டும், அவர்கள்?*

*தவறினைத் திருத்திக்கொண்டு, பேராசிரியர் கூறுவதுபோல சுய சிந்தனையோடு செயலாற்றவேண்டுமன்றோ! அதுதானே நாடாளும் நல்லவர்கள் செய்யவேண்டிய காரியம்!*

*மாறாக, இன்னும நமது மந்திரிமார்கள் மார் தட்டிப் பேசுகின்றனர் — முதல் ஐந்தாண்டுத் திட்டத்தின் மூலமாக உணவுப் பற்றாக் குறைப் போக்கிவிட்டதாக!*

*இதோ செப். 21-ந்தேதி அதே டில்லியிலிருந்து தகவல் வருகிறது* **—சவூதி அரேபியாவுக்கு ஆயிரம் டன்**

**முகப்பில்......**

**ஐசன்ஹோவரா-அட்லாய் ஸ்டீவன்சனா? இது அமெரிக்க மக்களின் கேள்வி — அவர்கள் கேள்வி மட்டுமல்ல, உலகத்தின் திகைப்பும்கூட.**

**அந்த இருவரின் உருவங்கள் தான் முகப்பில் காணப்படுகின்றன—தேர்தல் சின்னமாக.**

**குடியரசுக் கட்சியின் பிரதிநிதி ஐசன்ஹோவர் — ஜனநாயகக் கட்சியைச் சார்ந்தவர் ஸ்டீவன்சன் — 6—11—1956 அன்று நடக்கும் தேர்தல் தெரிவித்துவிடும் அய்க்கா—அட்லாயா என்பதை!**

## அரிசி தர, உடனடியாக, டில்லி ஒப்புக்கொண்டுள்ளதாம்!

*உடனடியாக அரிசி வேண்டும் என்றதாம் சவூதி அரேபியா — கெட்டிக்காரர்கள்தான்! நேரம் பார்த்துக் கேட்டிருக்கிறார்கள்! —உடனே, 1000 டன் கிளம்புகிறது, இங்கிருந்து,*

*அதுமட்டுமல்லவாம்,* **இன்னும் சின்னாட்களில் மேலும் அனுப்புவதாகத் தெரிவித்திருக்கிறதாம்.**

*இங்கே, ‘கல்கத்தா’ நடக்கிறது! பேராசிரியரும் ஏட்டாசிரியரும், விலைவாசி உயர்வின் காரணம் பற்றி அலசுகிறார்கள்! அரசும், ‘ஆமாம்’ என்று ஒப்புக்கொண்டு வெளிநாட்டிலிருந்து அரிசியையும் கோதுமையையும் 80 கோடிக்கு இறக்குமதி செய்யப்போவதாகக் கூறுகிறது.*

*இந்த லட்சணத்தில், “ஏதாவது கிடைக்குமா?”, என்று கேட்கப்பட்டதும் உடனடியாக ஒரு ஆயிரம் டன் கிளம்புகிறது சவூதி அரேபியாவுக்கு! இது நேருவுக்கு சவூதி அரேபியாவால் அளிக்கப்பட்ட உபசாரத்தை மேலும் பெரிய அளவில் நடத்தப் பயன்பட்டிருக்கலாம்.*

*காங்கிரசாட்சியின் போக்கு எப்படி யுள்ளது, ஆட்சி முறை எப்படிச் செல்லுகிறது, என்பதனை ஆழ்ந்து சிந்திக்க வேண்டுகிறோம், ஐந்தாண்டுத் திட்டங்கள் போட்டு சாதிக்கப் போகிறோம் எனும் அன்பர்களை.* ★

8-ம் பக்கத் தொடர்ச்சி

அவர் பலியானர் என்ருல் கூட, சாமியின் உயிர் குடித்த ஆணவ ஆட்சியின் ஆதிக்கத்தை அழித்தொழிப்போம், வாரீர், என்று அழைத்து, சூள் உரைத்திடச் செய்வேன்—சாமி, சாகவில்லையே—கொல்லப்பட்டார்—படுகொலை அல்லவா செய்யப்பட்டார். பெரியதோர் பயங்கரக் கலகமாம், இரு தரப்பினரும் ஆயுதம் எடுத்துப் போரிட்டனராம், எதிர்த் தரப்பிலே ஏழெட்டு பிணமாம், சாமியின் இதயத்திலே ஈட்டி பாய்ந்ததாம், சாய்ந்துபட்டாராம் கீழே என்று இருந்தால் கூட, சோகத்துக்கு இடையிலேயே ஒரு பெருமை உணர்ச்சி கூடப் பளிச்சிட்டிருக்கும்—கேட்கவே கூசும், கொடுமையல்லவா நடைபெற்றுவிட்டிருக்கிறது—இரவு மணி பத்தும் ஆகவில்லை—ஊர் உறங்கவில்லை—ஆள் அரவம் அடங்கவில்லை—வீடுசெல்கிருர்—வழியில், முட்டுச் சந்தில் அல்ல, காட்டுப் பாதையில் அல்ல, பனைமரச்சாலையில் அல்ல, பயங்கரப்பாதையில் அல்ல, நெடுஞ்சாலையின் நடுவே, எத்தனைபேர் தாக்கினரோ—ஏழெட்டு என்கிருர்கள்—கத்திக்குத்து மட்டும் பதினெட்டாம்—பாதையில் மடக்கிக் கொண்டு,பதைக்கப்பதைக்கவெட்டிக் கொன்றுவிட்டனரே—இதைக் கேட்டு, நெஞ்சம் கொதிப்படைவதன்றி—'அண்ணு' என்று அழுகுரலில் என்னை அழைத்த தோழர்களிடம் நான், என்னசொல்லுவது. பதருதீர்கள் என்பதா—நானே பதறிப்போயல்லவா இருக்கிறேன். அழாதீர்கள் என்பேனு, நான் அழுதுகொண்டு அல்லவா இருக்கிறேன். நான் அவர்களின் கண்ணீரைக் கண்டேன் — அவர்கள் நான் அழக் கண்டனர்.

சாமியின் இல்லம் சென்றேன்—உள்ளே நுழையும்போதே—இங்குதானே சில திங்களுக்கு முன்பு நம்மை அழைத்துவந்து இருக்கச் செய்து — உபசாரம் நடத்தி — உவகையுடன் உரையாடினர் — என்று எண்ணினேன்—கால்கள் பின்னிக்கொண்டன. உள்ளே படுக்கையில், செயலற்ற நிலையில் அமர்ந்திருந்தார், சாமியின் தந்தை, முதியவர், அவரிடம் சென்றேன்—ஐயோ! தம்பி! நான் எப்படி எடுத்துச்சொல்வேன் அந்த இதயம் வெடிக்கும் காட்சியை.

ஐயா! ஐயா! என் அருமை மகனைக் கொன்றுவிட்டார்களய்யா!

என் மகன் போய்விட்டானய்யா, போய்விட்டான்.

ஊருக்கு உழைக்கிருன், உத்தமனென்று பெயரெடுக்கிருன் என்று பூரித்துக் கிடந்தேன்—கொலை செய்துவிட்டார்களய்யா—கொன்று போட்டு விட்டார்களய்யா—என்று கூறிக் கதறினர் — என்னைக் கட்டிப் பிடித்தபடி. தம்பி! அந்த ஒரு கணம் நான் அடைந்த வேதனை, பகைவனுக்கும் வரலாகாது—நிச்சயமாகக்கூடாது.

உன்னிடம்தானே ஒப்படைத்தேன்—உலுத்தனே—எங்கே என் மகன்?—என்று கேட்கிறது, அந்த முதியவரின்கண்ணீர். நான் என்ன பதில் அளிப்பேனடா, தம்பி, என்ன பதில் அளிப்பேன்.

உங்கள் கழகத்தில்தானே என் மகன் ஈடுபட்டு, குடும்பத்தை மறந்து, தொண்டு செய்வதிலே மூழ்கிக் கிடந்தான்—அவன் கொல்லப்படுவதைத் தடுத்திடும் வக்கு அற்றுப் போனீர்களே! நீங்கள் மனிதர்கள் தானு!! — என்று கேட்கிறது அந்த முதியவரின் கதறலொலி! நான் என்ன பதிலளிப்பேன். மார்புடனசேர்த்து அணைத்துக்கொண்டேன் – எங்கள் இருவரின் கண்ணீரும் கலந்தன — சூழநின்ரோர் கதறினர்.

"ஐயா! சாமியைப் பறிகொடுத்துவிட்டோம் – கதறுகிரேம்—வேறு என்ன செய்யமுடியும்—ஐயா! சாமி போய்விட்டார் – என்னை உங்கள் 'சாமி'யாக ஏற்றுக்கொள்ளுங்களய்யா!" என்று கூறிக் கதறினேன்—பெரியவர், ஐயா! ஐயா! என் மகன்! என் மகன! என்று கதறியவண்ணம் இருந்தார்.

வயோதிகத்தால் இளைத்துக் கிடக்கும் அந்தப் பெரியவரின் மடியிலே, சாமி பெற்றெடுக்கும் செல்வங்களல்லவா, தவழ்ந்திருக்கவேண்டும்! அந்தப் பேரப்பிள்ளைகளை வாரி எடுத்து மார்போடு அணைத்து, உச்சி மோந்து முத்தமிட்டு, கண்ணே! மணியே! என்று கொஞ்சிடவேண்டிய அந்த முதியவர், தன் மகன் படுகொலை செய்யப்பட்ட கொடுமையைக் காண்பது என்ருல், ஐயயோ! அதைவிட இம்சை வேறு என்ன் வேண்டும்.

இருவ்ரும் சென்ரேம், சவக்குழி காண.

உடன்வந்தோர் உருகி அழுதனர் – சுற்றுப்புறமிருந்து வந்திருந்தோர் அனைவரும் பதறி அழுதனர்—நடராசன் தேம்பித் தேம்பி அழுதார்—முத்து சிறிதளவு சமாளிப்பார் என்று எண்ணினேன்—அவரும் கதறுகிருர், என்னுடன் வந்திருந்த நண்பர் பாபுவும், சென்னைத் தோழர் தேவராசன் அவர்களும், கண்ணீர் பொழிந்தனர்.

சவக்குழி—தம்பி — சாமியின் முயற்சியால் உருவாகி எழிலுடன விளங்கும் பள்ளிக்கூடத்தின பக்கத்தில்!! – ஒருபுறம் சாமியின வெற்றி — மற்ரேர்புறம் அவருடைய சவக்குழி — பணியின் உருவம் அந்தப் பள்ளிக்கூடம—பாதகரின் காதகச் செயலின உருவாக அமைந்தது சவக்குழி. அதனைக் காண நேரிட்ட கண்கள்—புண்கள். கண்டோப்—நாடு, காடுதான் சிற்சில வேளைகளில் — நல்லாட்சியும் நாகரிக மேம்பாடும், சட்டமும் சமூகக் கட்டுக்கோப்பும் எல்லாம் உள்ளன என்றுதான் பெருமையாகச் சொல்லிககொளகிரேம்—ஆனல் இதோ சவக்குழி—படுகொலை செய்யும் பாதகர்கள—எதிர்த்துப் போரிடவோ, தப்பிப பிழைக்கவோ முடியாத நிலையில சிக்கிக்கொண்டவனை வெட்டிக கொல்லும் வெறியர்கள், உலவுகிருர்கள் என்ற வெட்கக்கேடான நிலையைக் காட்டிக்கொண்டு இருக்கிறது. நெடுஞ்சாலையிலே நின்று நாசகாலர்கள் படுகொலை செய்திருக்கிருர்கள்—தடுத்திட ஒருவா இல்லை—துணைக்கு யாரும் இல்லை. துரைத்தனம் கொடிகட்டி ஆளகிறது—பல்லாயிரக்கணக்கிலே, ஆடவரும் பெண்டிருமாகக் கூடினா—அழுத கண்களுடன் — அனுதாபக் கூட்டத்தில். ஆறுதல் அளிக்கவந்தேன்—எனக்கு ஆறுதல் அளியுங்கள்—என்று கேட்டுக கதறினேன். ஒருவருடைய முகத்திலும் ஈயாடவில்லை.

படுகொலைக்குக் காரணம் என்ன? இந்தப் பயங்கரச் சூழ்நிலைக்குக் காரணம் யாது?—அனைவரும் கேட்கின்றனர் — ஒருவரும் இனனதுதான் என்று கூறமுடியாமல் திகைக்கின்றனர்.

சோகமும் திகைப்பும் தூத்துக்குடியைக் கப்பிக்கொணடிருக்கி

றது. தமிழகமெங்கும் இதுவே நிலைமையாகிக் கிடக்கிறது.

போலீசார் எடுத்துள்ள நடவடிக்கைக்குக் குந்தகம் ஏதும் விளைந்திடலாகாது, படுகொலை மர்மம் விளக்கப்படவேண்டும், நாட்டிலே தலைவிரித்தாடும் காட்டுப்போக்கு அடக்கப்பட்டாகவேண்டும், என்று தூத்துக்குடி வட்டாரமே கேட்கிறது.

தம்பி! என் வாழ்நாளில் இது போன்றதோர் கொடுமையை நான் கண்டதில்லை. நாங்கள்கூடத்தான் இப்படிப்பட்ட 'நீசத்தனமான'காரியத்தைக் கண்டதில்லை என்று அறுபது வயதினரும் கூறுகின்றனர்.

அதிர்ச்சியிலிருந்து நமது தோழர்கள் மீண்டிடவே சில காலம் பிடிக்கும் என்று தோன்றுகிறது—கலம் கவிழ்ந்து, பச்சிளம் குழந்தை பிணமாகிக் கடலில் மிதந்திடக் காணும் தாய், கதறுவது போலக் கதறுகின்றனர், நமது கழகத் தோழர்கள்.

ஆண்டு எட்டு ஆகிறது நமது கழகத்துக்கு — இந்த அறியாப் பருவத்திலே இப்படிப்பட்ட அக்ரமம், கொடுமை, நமது கழகத்தைத் தாக்கியிருக்கிறது.

தாங்கிக்கொள்ள இயலுமா? இந்தச்சோகத்திலிருந்து, திகைப்பிலிருந்து, நாம் மீள முடியுமா? அல்லது, திகைப்பு நம்மைச் செயலற்றவர்களாக்கி விடுமா என்று கூட சில வேளைகளிலே எண்ணிடத் தோன்றுகிறது.

எத்துணை மகிழ்ச்சியுடன் இருந்து வந்தோம்—இன்னல் பல வந்துற்றாலும், இழிமொழியாளர் எதிர்த்தாலும், தொல்லை பல துரத்திவந்து தாக்கினாலும், அவைதமை எதிர்த்து நிற்கும் ஆற்றல் பெற்றுவிட்டோம் என்றெல்லாம் எண்ணி இறுமாந்து கிடந்தோம். இந்தப் 'பேரிடி'யைத் தாங்கிக்கொள்ள முடிகிறதா, பார்! —என்று காலம் கேட்டுவிட்டதே, என் செய்வோம்:

சாமி, தனி ஆள் அல்ல! தந்தைக்கு மகன் என்பதான நிலையினன் மட்டுமல்ல! நம் கழகத்துச் செல்வன்—நம் குடும்பத்துப்பிள்ளை —நமது இலட்சியத்தின் காவலன். அவனைக்கொன்றதானது நம் ஒவ்வொருவரையும் வாட்டும் கொடுஞ்செயல்.

துரைத்தனத்தின் துப்பாக்கிக்கும், தடியடிக்கும், தூற்றிக் கிடப்போரின் இழிமொழிக்கும் ஈடு கொடுத்துக்கொண்டு, எதையும் தாங்கும் இதயம் வேண்டும் என்று இலட்சியம் பேசிக்கொண்டு திரிகிறீர்களே, இதோ உங்கள் சாமியைப் படுகொலை செய்கிறோம், தாங்கிக் கொள்ளுங்கள் பார்க்கலாம் என்று கேட்பது போலல்லவா, இந்தக் கொடுமை நடந்து விட்டது. தம்பி! நாம் என்ன செய்வது?

எனக்கு ஒன்று தோன்றிற்று, தூத்துக்குடியிலிருந்து திரும்புகையில். நாம், வளர வளர, கொடுமை பலப் பல, பல்வேறு வகையில் நம்மைத் தாக்கத்தான் செய்யும் என்று தோன்றிற்று. நாம், மிகச் சாமான்யர்கள்—சிறுவர்கள் என்று கூடச் சொல்கிறார்கள் — நமக்கு ஏற்பட்டுவிட்ட வளர்ச்சியின் அளவுக்கு வளர்ச்சி காண, அனுபவமிக்கவர்கள் அரைநூற்றாண்டு பாடுபட்டால்மட்டுமே பெறமுடிகிறது, பிற கட்சிகளால்.

கொழுந்துவிட்டெரியும் ஆர்வம் காரணமாகவும், கொள்கைப் பற்றுடன் பணியாற்றும் திறனாலும், கொதிப்பு மூட்டுவோர்பற்றிப் பொருட்படுத்தாது பணியில் ஈடுபடும் பண்பினாலும், நாம், மிக உன்னதமானதோர் வளர்ச்சியைக் கண்டோம். இது கண்டு பொருதாரும், இதற்கு நாம் தகுதி அல்ல என்று எண்ணுவோரும், இது நமக்குக் கிட்டாமற்போயிற்றே என்று ஏங்குவோரும் ஏராளமாக உள்ளனர். அவர்களில் பலர் வெளியில் இருந்து நமக்கு வேதனை விளைவிக்க பல்வேறு முறைகளில், முனைகின்றனர். உடனிருந்து கொண்டே வேதனை விளைவிக்கவும் சிலர் உளர்போலும். எதுஎப்படி இருப்பினும், இந்தக் கட்டத்தையும் நாம் கண்டாகவேண்டும்போல் தோன்றுகிறது. பயல்கள். இதனால் மருளட்டும், மனம் உடைந்து போகட்டும், என்று எண்ணுவோரும் இருக்கக்கூடும். இந்நிலையில் நாம் செய்யவேண்டியது என்ன? நான் எண்ணி எண்ணிப் பார்த்தேன் — ஒன்றுதான் எனக்குப் பட்டது—அதைத்தான் தம்பி, உனக்கும் கூறுகிறேன். எந்த நேரத்தில் எந்த வடிவத்திலும், எத்தகைய காதகச் செயலுக்குப் பலியாக நேரிடுமோ என்ற நிலைமை இருக்கிறது — அந்த நிலைமையின் ஒரு அறிகுறிதான் சாமி படுகொலைச் சம்பவம்— அந்த நிலைமை நமக்குக் குழப்பத்தையும் கிலியையும் மூட்டுவதாக இருத்தலாகாது — அப்படிப்பட்ட ஆபத்து எந்த நேரத்திலும் நேரிடக்கூடும், ஆகையால், ஒவ்வோர் நாளும், நாளை என்ன ஆகுமோ, இன்றேநாம் நம்மாலான நல்ல தொண்டினைச் செய்து முடித்துவிடுவோம், என்ற பொறுப்பைத்தான் நமக்கு அளிக்க வேண்டும். அதற்கென்ன பிறகு செய்யலாம்—நாளையத்தினம் பார்த்துக்கொள்வோம் — அவசரம் எதற்கு — என்று நாம், யாரும், காலதாமதம் செய்வது கூடாது—ஒவ்வோர் நாளும் பணியாற்றும்போது, இதுவே நமது கடைசி நாளாகிவிட்டால் என்ன செய்வது, இன்றே நம்மாலானதைச் செய்து முடித்துவிட வேண்டும் என்ற எண்ணத்துடனேயே பணியாற்ற வேண்டும். அது ஒன்றுதான், நாம் மேற்கொள்ள வேண்டிய முறை—இப்போதைய சோகச் சம்பவம் நமக்குக் காட்ட வேண்டிய பாடம்.

சாமி,சவக்குழியில்;நாம்வெளியில்.

சவக்குழியினின்றும் ஒருவரும் தப்பித்துக்கொள்ளப் போவதில்லை —ஆனால் அங்கு கொண்டுசெல்லப்படுமுன், நமது தொண்டு, பார்த்தோர் பாராட்டத்தக்க விதமான பட்டியல் ஆக இருத்தல் வேண்டுமல்லவா அதனை மனதிலிருத்தி நாம் அனைவரும் நித்த நித்தம் மெத்தவும் பாடுபட்டு, நமது பங்கினைச் செலுத்திவிட வேண்டும். நாளை, நாளை என்பது கூடாது! நாளையத்தினம், யார், நம்மைச் 'சாமி'யாக்கிவிடுவார்களோ, யார் கண்டார்கள்—எனவே இன்றே நாம் நமது கடமையைச் செய்யவேண்டும்.

கண்ணீர் தளும்பும் நிலையில் இருக்கிறோம் — கடமை வீரனைப் பறிகொடுத்ததால். நாம் நமது கடமையை விரைந்து செய்தல் வேண்டும் என்பதைக் காட்டும், கொடிய ஆசானாகிறது, அந்தச் சவக்குழி.

அன்பன்,

அண்ணாதுரை

4-ம் பக்கத் தொடர்ச்சி

ஜெக:- இக்கட்டா?...என்ன இக்கட்டு?

மி:- என்னுடை வீட்டுக்காரி இருக்காளே, அவ கொஞ்சம் வாயாடி ...தெரியுதா...இப்ப நான் புறப்பட்டேனு, எங்கே கிளம்பிட்டிங்கன்னு கேட்டா, ஐயர், காந்தி ஜெயந்தி நடத்தருரு, நான் தான் தலைமைன்னு சொன்னேன், உடனே அவ, சிரிசிரின்னு சிரிச்சிப்போட்டு, ஆமாம், இப்படி நீங்க காந்தி ஜெயந்திக்குத் தலைமை வகிக்கிறதும், சர்க்கார் கடன் பத்திரத்தை இலட்சக் கணக்கிலேவாங்குவதுமா இருக்கறிங்களே, நாளைக்கு, எலக்ஷனிலே உங்களைக் காங்கிரஸ் நிறுத்தாட்டிப்போனு, ஊரே கேலி செய்யாதான்னு கேட்டு விட்டு, கிண்டல் செய்கிரு...

காத்:- காந்திஜெயந்தியிலேகலந்து கொள்றதுக்கும் எலக்ஷன் விஷயத்துக்கும் என்ன சம்பந்தம்?

ஜெ:- காத்தமுத்து! நீ உள்ளே போயி...சபையைஒழுங்கா இருக்கச் சொல்லு...உள்ளே இருக்கு ...மடப்பளி பக்கம், பெரிய 'சேர்' அதை எடுத்துப் போடு, நடுவே ......

[காத்தமுத்து உள்ளே போகிருன்]

ஜெக;- அந்தப் பய ஒரு மாதிரி... அதனுலேதான் அவனே உள்ளே போகச் சொல்லிவிட்டேன்...உம்மோட 'பார்யா' கேட்டதிலே சூக்ஷமம் இல்லாமலில்லே. ஆனு, ஒண்ணு நிச்சயமாத் தெரியட்டும், உமக்கும் சரி, உம்மோட பார்யாளுக்கும் சரி, இந்தத் தடவை எலக்ஷனுக்கு நீங்கள் தான்...இதிலே லவலேசமும் சந்தேகம் வேண்டாம்...

மி:- அதென்னய்யா அவ்வளவு நிச்சயமாச் சொல்றீர்...

ஜெ:- என் வாக்கு எப்போதாவது பொய்த்ததுண்டா, சொல்லுங்கோ...

மி:- பார்ப்போம், வா, வா. ஆமா, யாரார் பேசப்போறது...வம்பு தும்பு பேசற ஆளுக எவனும் இல்லையே...

ஜெக:- காந்தி ஜெயந்தியிலே வம்பும் தும்பும் பேசுவாளா...எலக்ஷன் கூட்டமானலும், ஏதோ அப்படி இப்படிப்பேசறதுதான், இது, மகாத்மாவோட மகிமையைப்பத்தி எடுத்துச் சொல்கிற கூட்டமல்லவோ...வாங்க...

[இருவரும் உள்ளே செல்கின்றனர்.

ஒரு வாலிபன் சோகக் குரலில் பாடுகிருன்]

(பாட்டு)

அனியாயம் தானுங்கோ
அவனிக் கடுக்காதுங்க
அக்ரமக்காரன் பேரு
கோட்சே தானுங்க
(அனியாயம்)

மாலையிலே பஜனைக்கூட்டம்
மகாத்மா வந்தாருங்கோ
மாபாவி கோட்சே வந்தான்
மகாத்மா காந்தியைக் கொல்ல
(அனியாயம்)

இந்துவும் முசுலீமும் ஒண்ணுன்னு சொன்னரு
இங்கே மதச்சண்டைகள் ஏனுன்னு கேட்டாரு
இதுக்காக பார்ப்பன கோட்சே
கொலை செய்யத் துணிஞ்சானுங்க
(அனியாயம்)

கோட்சே கூட்டம் இன்னும்
கொடிகட்டி ஆளுவதா?
கொலைகாரக் கும்பலின் கொட்டம்
தரைமட்ட மாக்கோணும்,
குலமும் ஒண்ணு, கடவுளும் ஒண்ணு
என்றேதான் ஓதணும்......
(அனியாயம்)

ஜெ:- (உரத்த குரலில்) டே...டேய் ......போதும்டாப்பா, உன்னுடை சங்கீதம், நிறுத்து...

கூட்டத்தில் ஒருவர்:- பாட்டுமே ஏன்யா நிறுத்தச் சொல்றிங்க...

மற்ருெருவர்:- பாடு! பாடு!

வேருெருவர்:- உருக்கமான பாட்டு ஏன் வேணும்னு சொல்ருரு...

மற்;- பார்ப்பன கோட்சேன்னு பாட்டு இருக்கே, அது பொத்துகிது...

[பலரும் சிரிக்கிருர்கள்]

ஜெக:- (கோபமாக) மேதாவிகள் ...! பார்ப்பன கோட்சேன்னு பாடுவதாலே, நேக்கு பொத்துக்கவும் இல்லே, குத்திக்கவும் இல்லே...தெரியறதோ....மகாத்மாவைக் கொலை செய்தவன் ஒரு மகா பாதகன்...அப்படிப்பட்ட மகாபாவி பிராமணனு பொறந்திருந்தாலும், சண்டாளன்தான், தெரியறதோ... அவன் நாசமாப்போனன்... நேக்கு அதுபத்தி பரம சந்தோஷம் தெரியறதோ...நான் இப்ப, பாட்டு வேணும்னு சொல்ற காரணம், என்னதெரியுமோ...அது தெரியாமப்படிக்கு ஆ—ஊன்னு, காட்டுக் கூச்சல் போடறீளே... கேளுங்கோ,இது மகாத்மாவோட ஜெயந்தி—நம்க்கெல்லாம் பெரிய பண்டிகை...ராமநவமி கிருஷ்ண ஜெயந்திபோல, இது...இப்படிப்பட்ட நாளிலே, சினிமா மெட்டிலே பாடலாமோ...அதைச் சொல்லுங்கோ...இப்ப, இந்த ஆசாமி பாடின பாட்டு, இப்ப ஏதோ சினிமாவிலே வந்த பாட்டு...கூத்தாடிண்டு பாடற பாட்டு...தெரியறதோ....அதை போயி, இங்கே பாடலாமோ... பாரதியார்பாட்டு, நாமக்கல்லார் பாட்டு, தேசிய விநாயகம் பாட்டு எத்தனை இருக்கு......பாடலாமேன்னு...சுத்தானந்த பாரதி என்ன அழகா பாடி இருக்கார், அற்புதமா...அதை விட்டுட்டு இந்த அழகான பொண்ணு —அதுக்கேத்த கண்ணு—இந்த பாட்டுத்தானு கிடைச்சுது, பாட. அதுக்காகச் சொன்னேன், தெரியறதோ. அதுக்குள்ளே கூச்சல் போடறீளே...

ஒருவ:- அப்படிங்களா...சரிங்க... சரிதானுங்க...

இ:- மெட்டு கிடக்கட்டும்...மகாத்மாவை இப்படிப்பட்டவன், இன்ன காரணத்துக்காகக் கொலை செய்தான் என்பது பாடிக்காட்டவேண்டியதுதானே

வேருெ:- சரி,பாட்டுத்தான் முடிஞ்சுதே...இன்னும் அதைப்பத்தி சர்ச்சை என்ன—எதுக்காக?

இன்ஸ்பெக்டர்:- சைலன்ஸ்......... சைலன்ஸ்...ஏய், 88...எங்கேடா அந்தப்பய 63...என்ன செய்திண்டிருக்கிங்க...

[போலீஸ் இன்ஸ்பெக்டர் மிரட்டியது கண்டு கூட்டம் அமைதியாகிறது]

ஜெ:- மகா ஜனங்களே! மகாத்மாவோட, ஜெயந்தி இன்னக்கி, நமக்கெல்லாம் புண்ய தினம். பாரத தேசம் பவித்திரமான தேசம். இந்த தேசத்திலே தான், மகாத்மாக்கள் அவதரிச்

சிருக்கா. தெரியறதோ மத்த மத்த தேசங்களிலே எல்லாம் இது இருக்கு, அது இருக்கு, அணுகுண்டு இருக்கு, ஆகாசக் கப்பல் இருக்கு அப்படி இப்ப டின்னு பேசுவா, நீங்க கேளுங்கோ, அவாளைப்பார்த்து, எல்லாம் இருக்கலாம் உங்களி டம், ஒரு மகாத்மா இருக்காரா, உங்களிடம்...ஒரு அவதார புரு ஷர் உண்டா......ராமாவதாரம், கிருஷ்ணவதாரம் இதுபோலப் பத்து...தெரியறதோ......பாரத தேசத்திலே பகவான் பத்து அவதாரம் எடுத்திருக்கார்...... மகாத்மாவும் அவதார புருஷா ...அவரோட ஜெயந்தி...இதுக் குத் தலைமை வகிச்சி நடத்தித் தருவதற்காக, யார் இருக்கா பொருத்தமான்னு நேக்குக் கவலை குடைஞ்சிண்டு இருக் கச்சே, என்மக, வத்சு......உங்க ளுக்கெல்லாம் அப்படிச் சொன்னா கோபமா இருக்கும், டாக்டர் வத்சு......இப்பத்தான் உங்களுக்குத் திருப்தி, தெரியும் நேக்கு...வத்சு சொன்னா வெண் ணெயை வைச்சிண்டு நெய்க்கு அழறீரே, நம்ம மிட்டாதாரர் மாணிக்கம், அவா, இருக்கச்சே, தலைமை வகிக்க வேறே யார் வேணும்னு, கேட்டா. சரி...ன் னேன்....அழைச்சேன்......அவ ருக்கு எவ்வளவோ வேலை...... இருந்தாலும் ஒத்துண்டு வந்தி ருக்கார்......இப்ப, அவாளுக்கு, உங்க சார்பா, நான் மாலை போடப்போறேன்........ஆனந்த மாப் பாருங்கோ...சந்தோஷமா, ஜெயகோஷம் செய்யுங்கோ...

[மாலை அணிவிக்கிறார். யாரும் ஜெயகோஷம் செய்யவில்லை. ஒருவர் தும்முகிறார்.

அந்தச் சத்தத்தைக் கேட்டுப் பலர் சிரிக்கி றார்கள்]

மிட்டா மாணிக்கம்:- (நடுக்கும்குரலில்) எல்லாருக்கும் என்னுடை நமஸ் காரம். மகாத்மாவோட ஜெயந்தி யிலே, பெரிய பெரிய மகான்கள் பேசவேணும். நான், ஏதோ, சம் பத்திலே பெரியவனாயிருக்கலாம், ஆனா, இதுமாதிரியான யோக்ய தைக்கு நான்தானா சரியான ஆளுன்னு பலபேருக்குச் சந் தேகமாயிருக்கும்.

ஜெக:- ஒருத்தருக்கும் சந்தேகம் இல்லை......

[டாக்டர் வத்சலா கை தட்ட, அது கண்டு போலீஸ் இன்ஸ்பெக்ட ரும் கை தட்டுகிறார்]

இப்ப, இங்கே, மகாத்மாவோட விஷயமாச் சில பேர் பேசுவா... கூட்டம் கொஞ்சம் சுருக்கா முடிஞ்சா நல்லதுங்க... ஏன்னா, நான் எட்டு மணிக்கெல்லாம் புறப்படவேணுமுங்க...... நாளை காலையிலே மெட்ராசிலே வக்கீ லைப் பார்த்துப் பேசணும்... என்னுடை வியாபார சம்பந்தமா, இன்கம்டாக்ஸ் விஷயமா... ஒரு விஷயம் இந்த மாதிரி புனிய நாளிலே சொல்லிவைக்க வேணும்னு நினைக்கறேன்...... பாருங்க, இன்கம்டாக்ஸ் டிபார்ட் மெண்ட் இருக்குதுங்களே, அது, நம்மோட ராஜாங்கத்துக்கு உள்ள செல்வாக்கை ரொம்பக் குறைச்சிபோடுதுங்க. என்னுட டம், அதனோடுமல்லுக்கு நின்னுகிட்டு, வக்கீலுக்கும் வாய் தாவுக்கும் பணத்தைக் கொடுத்துகிட்டு கஷ்டப்படற வங்களோட, வயித்தெரிச்சல் சொல்லி முடியாதுங்க. இன்கம் டாக்ஸ், கணக்கைப் பார்த்துப் போடட்டும் — அது நியாயம் — தர்மராஜ்யம் அப்படித்தான் இருக்கணும். கணக்கை காட் டினா, தப்புன்னு தூக்கிப்போட்டு விட்டு, மிட்டாதாரரே! இந்த ஜில்லா பூராவும் 60000 தென்னை மரம் இருக்கு—ஒரு மரம் ஒண் ணுக்கு 5 ரூபா இலாபம் உங்க ளுக்குக் கிடைச்சு இருக்கணும், அந்தக் கணக்குப்படி, கொண்டு வா, 3 இலட்சம்னு கேட்டா, நீங்களே சொல்லுங்க... நியா யமா... தர்மராஜ்யமா. மகா ஜனங்க, தப்பா எடுத்துக்கொள் ளக் கூடாதுங்க... நான் கள்ளுக் கடை காண்ட்ராக்ட் நடத்தினது இப்ப இல்லாங்க... மதுவிலக்கு வாரதுக்கு முந்தியே, நான் விட் டுப்போட்டேனுங்க...அதிகமாப் பேசலிங்க... இப்ப நம்ம ஊர் போலீஸ் இன்ஸ்பெக்டர் பொன்னுதுரை பேசுவாருங்க...

போலீஸ் இன்ஸ்:- நான் அதிகம் பேசப்போறதில்லை......பேசக் கூடாது...பேசத் தேவையு மில்லே...மகாத்மா காந்தி ஒரு அவதார புருஷர், அவர் சர்க் காரை எதிர்த்தார், அது வெள் ளைக்கார சர்க்காரை, இப்ப நடக் கறது காங்கிரஸ் சர்க்காரு, இதை யாரும் எதிர்க்கப்படாது, மகா பாபம், மகாத்மாவோட சாபம் வரும். மத்தப்படி சுய ராஜ்யம் வந்ததாலே, சட்டம் கூடாது, போலீஸ் கூடாது அப்படி இப்படின்னு பேசுவது, இனிப் பிசகு. அதனாலே, எல் லோரும், அவா, காங்கிரசாரா இருந்தாலும், வேறே கட்சி யானாலும், மகாத்மாவோட புக ழைப் பாடணும்—தேசத்திலே ஒழுங்கா வாழவேணும்-சண்டை சச்சரவு கூடாது...வந்தே மாத ரம்...அவ்வளவுதான்...

[தலைவர் கை தட்டுகிறார், வேறு சிலரும் கை தட்டு கிறார்கள்]

முனுசாமி (பாடியவன்) :- மகாத்மா காந்தியின் பிறந்த தின விழா... புனிதமான விழா...நாட்டுக்குப் புதுவாழ்வு வாங்கித் தந்த உத்த மரின் திருநாள்...இந்த நாளிலே பேசும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது....மகிழ்கிறேன்...... நான் காங்கிரஸ்காரன் அல்ல...

[கூட்டத்தில் பரபரப்பு]

இப்போது நான் காங்கிரஸ்கார னாக இல்லை. காங்கிரசுக்கு இப் போது, என்னைப்போன்றவர்கள் தேவையில்லை.

நானும், காத்தமுத்துவும், ஒன்றாக மூன்றுமுறை சிறை சென்றோம். கொடிப் போராட்டத்திலே காத்தமுத்து ஈடுபட்டு, போலீஸ் குண்டாந்தடியடிக்கு ஆளாகி அவதிப்பட்டவர். நான் கள்ளுக் கடை மறியலில் ஈடுபட்டு, போலீசாரால் அல்ல, கள்ளுக் கடை நடத்திய புண்யவானால், பனைமரத்தில் கட்டிவைத்து அடித்து இம்சிக்கப்பட்டவன். அந்தப் புண்யவான் தலைமை யிலே காந்தி ஜெயந்தி நடக்கி றது—இதோ மிட்டாமாணிக்கம் அவர்கள் — இவர் கடையிலே தான், எனக்கு.

[சட்டையைக் கழற்றி தழும்புகளைக் காட்டி]

இவை கிடைத்தன! நான் காங்கிரஸ்காரன் அல்ல!

[பலத்த கர கோஷம்]

மகிழ்கிறீர்களா...ஏன் கை தட்டுகிறீர்கள்...கண்ணீர் வடியுங்கள்......கைகளைப் பிசைந்துகொள்ளுங்கள்...கள்ளுக்கடை நடத்தினவரானவர் காந்திஜெயந்திக்குத் தலைவர்......சத்யாக்கிரகத்தை அடித்து நொறுக்கிச் சன்மானம் பெற்ற இன்ஸ்பெக்டர், பிரசங்கி, கோயில் பிரவேசம் கூடாது என்று ஆலய வாயற்படியில் முள்வேலி போட்டுத் தடுத்த, ஜெகநாத ஐயர், ஜெயந்தி கமிட்டித் தலைவர்! இந்தக் காங்கிரசில் நான் எப்படி இருக்கமுடியும்? நான் காங்கிரஸ்காரனல்ல.

நான், இவர்களெல்லாம் ஏன் காங்கிரசில் இருக்கிறார்கள், நாங்களல்லவா இருக்கவேண்டும் என்று கேட்க வரவில்லை. எங்களால் இருக்கமுடியாது—காங்கிரசுக்கு உள்ள பசியை அடக்க எங்களால் முடியாது.

முன்பெல்லாம் காங்கிரஸ் சேவை, தியாகம், இவைகளைக் கேட்டது—கொடுத்தோம்—இரத்தம் கீழே கொட்டும்—கலங்கினதில்லை,—காத்தமுத்து அழுகிறான்......பைத்யக்காரன்! ஏன் அழவேண்டும்.....நம்மிடமிருந்து பெற்றுக்கொள்வதற்கு, ஒன்றும் இல்லை இப்போது.

முன்பு நமது இளமையைக்கொடுத்தோம், உழைப்பைக் கொடுத்தோம்—இப்போது காங்கிரஸ், பணம் கேட்கிறது—பண்பு அல்ல—ஊரில் கொழுத்தகிடா இருக்கிறதா கொண்டுவா என்கிறது, உண்மை ஊழியர்களை அல்ல...இந்தக் காங்கிரஸ் அவன் கள்ள மார்க்கட் காதகனானாலும் கொள்ளை இலாபம் அடிப்பவனானாலும், கோவிலைச் சுறண்டினவனானாலும் ஏழை அரிஜனனை இம்சித்தவனானாலும், கள்ளுக்கடை நடத்தியவனானாலும், யாராக இருந்தாலும் பரவாயில்லை, எலக்ஷனில் செலவு செய்யப் பணம் இருக்கிறதா-இருந்தால் அழைத்துவா—என்று கேட்கிறது. இந்தக் காங்கிரசில் நான் இல்லை...

இந்தக் காங்கிரசை நான் கேட்கவுமில்லை.

இந்தக் காங்கிரஸ் இவர்களோடு இருந்துவிட்டுப் போகட்டும்.

இவர்களாலே கெட்டுவிட்ட காங்கிரஸ் இனி என்போன்றவர்களுக்கு வேண்டாம்.

இந்தக் காங்கிரசின் அகோரப் பசியைப் போக்க, என் போன்றாரால் முடியாது.

நான் இந்தக் காங்கிரசைக் கேட்கவில்லை.

நான், எங்கள் மகாத்மாவை எங்களிடம் தந்துவிடுங்கள், அவரிடம், சொந்தம் கொண்டாடாதீர்கள் — அவரையும் எம்மிடமிருந்து அபகரித்துக்கொள்ளாதீர்கள்—என்றுதான் கெஞ்சிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மகாத்மாவையாவது மிச்சமாக விடுங்கள்.**

[கூட்டத்தினர் ஆரவாரம் செய்து ஆதரவு அளிக்கக் கண்டு, மிட்டா மாணிக்கமும் ஜெகநாதரும் மிரளுகிறார்கள்]

ஜெக:- காத்தமுத்து! இந்தக் காலியை ஏன் அழைத்துக் கொண்டு வந்தாய்?

காத்:- நாவை அடக்கிப் பேசணும்—காலி அல்ல — உண்மைக் காங்கிரஸ் தொண்டர், என் நண்பர்—இந்த ஜில்லாவில் காங்கிரசுக்கி ஒருவரும் ஆதரவு தர முன்வராத நாட்களிலே அரும்பாடுபட்டவன்...

இன்ஸ்:- காத்தமுத்து! இவன் தானே வேலாம்பட்டி வெடிகுண்டு வழக்கிலே இருந்தவன்!

ஜெக:- வெடிகுண்டு ஆசாமியா?

மிட்டா:- பேச்சிலிருந்தே தெரிகிறதே...

[கூட்டத்தில் கலவரம் ஏற்படுகிறது]

[கூட்டத்தை விட்டு வெளியேற மிட்டா மாணிக்கம் முயற்சிக்கிறார். ஜெகநாத ஐயர், அவர் காலைத் தட்டிவிட்டு, அவர் கீழே இடறிவிழச் செய்கிறார். முனுசாமியும், காத்தமுத்துவும், கீழே விழுந்துவிட்ட மிட்டா மாணிக்கத்தைத் தூக்கச் செல்கிறார்கள்.]

மி:- (மிரண்டு) ஐயயோ! கொலை! கொலை செய்ய வருகிறார்கள்.

ஜெக:- போலீஸ்! போலீஸ்!

[போலீஸ் இன்ஸ்பெக்டர் குழலெடுத்து ஊதுகிறார்.

போலீசார் உள்ளே ஓடி வருகிறார்கள்.

மக்கள் பயந்து ஓடுகிறார்கள்

போலீஸ் இன்ஸ்பெக்டர் முனுசாமியையும் காத்தமுத்துவையும் கைது செய்கிறார்.

பத்திரிகை நிருபர் வருகிறார்.]

நிரு:- (ஜெகநாதரிடம்) என்ன கலவாம்?

ஜெக:- காந்திஜெயந்தியில் கலந்து கொள்ததுபோல நடித்துக் கொண்டு, மிட்டாதாரரைத் தாக்கிக் கொள்ளையடிக்க இந்தப் பயல் முனுசாமி முயற்சித்தான்—காத்தமுத்து இதற்கு உடந்தை.

இன்ஸ்:- கலவரம் செய்தது—மிட்டாதாரைத் தாக்கியது—போலீஸ் அதிகாரியை வேலை செய்ய ஒட்டாதபடி தடுத்தது—கொள்ளை அடிக்க முயற்சித்தது—ஆகிய குற்றங்களுக்காக இருவரையும் கைது செய்திருக்கிறேன்.

நிருபர்:- காந்தி ஜெயந்தியில் கலகம் என்றல்லவா சேதி வெளியிடவேண்டும் போலிருக்கிறது...

டாக்டர் வத்சலா:- ஏன்! இப்படிப் போடலாமே! இன்ஸ்பெக்டர் தீவிரம்—காலிகள் பிடிபட்டனர்—காந்தி ஜெயந்தியின்போது சம்பவம்.

நிரு:- போடலாம்.....என்றாலும் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது என்றுதானே போடவேண்டி வரும்.

ஜெக:- ஏன்! கூட்டத்தைச் சுமுகமாகவே முடித்தால் போகிறது...வத்சு...பாடு...

[முனுசாமியையும் காத்தமுத்துவையும் போலீசார் இழுத்துக்கொண்டுசெல்கிறார்கள்.

மக்கள் அவர்களைத் தொடர்ந்து செல்கிறார்கள்.

முனுசாமிக்கு ஜே!

காத்தமுத்துவுக்கு ஜே!!

என்று.

உள்ளே டாக்டர் வத்சலா 'ஜன கண மன'பாடுகிறார்.]

★

# உலக அரங்கில்

## செஞ்சீனு

★

'மாபெரும்' நாடான இந்தியாவின் பிரதமரான நேருபண்டிதருக்குத்தான் செஞ்சீனம் உலகம் வியக்கும் வரவேற்பைத் தந்தது என்று பெருமிதப்பட்டனவல்லவா, நமது தேசிய ஏடுகள்? அந்தளவுக்குப் பெருமிதமான வரவேற்பு இந்தக் கிழமை, இந்தோனேஷியத் தலைவர் டாக்டர் சுகர்ணேவுக்கும் அளிக்கப்பட்டிருக்கிறது சீனத்தில். சீனச்சிற்பி மாசேதுங், நேரே விமான நிலையத்துக்கு வந்திருந்து வரவேற்றாராம், சுகர்ணேவை. சீனத்தின் மிகப் பெரிய தலைவர்கள் அனைவரும் வந்திருந்தனராம் வரவேற்க. சீனுவுடனும் இந்தியாவுடனும் ஒப்பிட்டால் இந்தோனேஷியா மிகச் சிறிய நாடு! எனினும் இவ்வளவு பெரிய வரவேற்பைப் பெறமுடிந்ததே.

✱

## இஸ்ரேல்

★

சூயஸ் பிரச்னை மட்டுமல்ல, மத்திய கிழக்கில் இஸ்ரேலும் ஒரு பிரச்னையாகி வருகிறது! சுற்றிலும் இஸ்லாமிய நாடுகள் சூழ அமைந்திருக்கும் யூதர்கள் நாடாகும் இது. அருகிலிருக்கும் ஜோர்தானுக்கும் இதற்கும் அடிக்கடி தகராறுகள் ஏற்பட்டுக் கொண்டிருக்கிறது. கடந்த சில நாட்களுக்கு முன்பு இஸ்ரேலியர்கள் ஜோர்தான் துருப்புக்களில் 6 பேரைக் கொன்றுவிட்டனராம். அதைக் கேள்விப்பட்ட அரபு நாடுகள் எல்லாம் சீற்றம் கொண்டுள்ளன. அரபு நாடுகளில் ஒன்றுன எகிப்தும், இஸ்ரேலின் போக்கை கண்டித்துள்ளது. இந்தச் சமயத்தில் இஸ்ரேலுக்கு சில போர் விமானங்களை அனுப்பி உதவியிருக்கிறது கானடா. இதை அரபு நாடுகள் ஆட்சேபிக்கின்றன. இஸ்ரேலுக்கும் அரபுநாடுகளுக்குமிடையே ஒரு சமரசம் உதயமாகாவிட்டால் எப்போதும் ஒரு தலைவலி இருந்துகொண்டேயிருக்கும் மத்திய கிழக்கில் என்று இந்த கிழமை, ஐ. நா. பொதுச் செயலாளர் டாக் ஹாம்மர்ஸ்ஜோஸ்டு எச்சரித்துள்ளார்.

✱

## சவூதி அரேபியா

★

சவூதி அரேபியாவுக்குச் சென்றிருக்கும் நேருவும் சவூதி அரேபிய மன்னரும், சூயஸ் எகிப்துக்குச் சொந்தம் எனும் கருத்துப்பட அறிக்கை வெளியிட்டிருப்பது அனைவரும் அறிந்ததே. சவூதி அரேபியா, சூயஸ் விஷயத்தில் முக்கிய பங்கு எடுத்திருப்பது, அமெரிக்காவுக்கு அதிர்ச்சியைத்தான் தரும். ஏனெனில், அமெரிக்கா, சவூதி அரேபியாவிலுள்ள தஹ்ரன் எனுமிடத்தில் ஒரு விமான தளத்தை இனனும் வைத்திருக்கிறது. இது ரஷ்ய எல்லையிலிருக்கும் பாகு விமான தளத்துக்கு அண்மையிலிருப்பதாகும். போர்க் காலத்தில் அமைக்கப்பட்ட இந்த விமான தளத்துக்கு வாடகையாக ஆண்டொன்று 5 கோடி டாலர் தரவேண்டுமென்று சமீபத்தில் சவூதி அரேபியா கேட்டிருக்கிறது.

✱

## பிரிட்டன்

★

பிரிட்டனிலுள்ள எதிர்க்கட்சியான தொழிற் கட்சியின் மாநாடு இந்தக் கிழமை ப்ளேக்பூல் எனுமிடத்தில்நடைபெறவிருக்கிறது. சூயஸ் பிரச்னையில் ஈடன் சர்க்கார் ஈடுபட்டுள்ள இச்சமயத்தில் கூடும் இம்மாநாட்டை இலண்டன் வட்டாரங்கள், கூர்ந்து கவனிக்கின்றன இம்மாநாட்டில்கட்சியின் பொருளாளர் பதவிக்கு, தொழிற்கட்சியின் பெரிய தலைவர்களில் ஒருவரான பெவான் போட்டியிடுகிருர். இவர் தேர்ந்தெடுக்கப்பட்டால் தொழிற் கட்சியின் இப்போதைய தலைவரானகெயிடஸ்கல்லுக்கு அடுத்தபடியான இடம் இவருக்குத்தான். மாநாடு கூடுகிற இச் சமயத்தில் பிரிட்டனில் நடைபெற்ற ஒரு உபதேர்தலில் ஆளும் கட்சியைத்தோற்கடித்து தொழிற் கட்சி உறுப்பினர் பார்லிமெண்டு உறுப்பினராயிருக்கிருர்! இந்தக்கிழமை நடைபெற்ற இத்தேர்தல், சூயஸ் பிரச்னையில் ஈடனின் போக்கு மீது மக்களுக்குள்ள அதிருப்தியையே காட்டுகிறது.

✱

## செரட்ஸிகாமா

★

வெள்ளை மாதை மணந்தார் என்பதற்காகத் தடை விதிக்கப்பட்டிருந்த செரட்ஸிகாமா தன்னுடைய சொந்த நாடான 'பெச்சுனலாண்ட்'டுக்கு செல்லலாம் என்று பிரிட்டிஷ் அரசால் அனுமதிக்கப்பட்டிருக்கிருர். தென் ஆபிரிகாவிலுள்ள இந்த நாட்டின் முடி மன்னராகயிருந்திருக்க வேண்டியவர் இவர். வெள்ளை மாதை மணந்தார் என்பதற்காகவே, பிரிட்டன், மணிமுடியைப் பறித்து தடையும் விதித்தது. இப்போதும் இவர் ஒரு சாதாரண பிரஜை என்கிற கட்டுப்பாட்டுடனேயே அனுமதி அளிக்கப்பட்டிருக்கிருர். காலம் இழந்த பதவியை இருவருக்கு மீண்டும் அளிக்கும் என்று எல்லோராலும் கருதப்படுகிறது.

✱

## பொலிவியா

★

வாழ்க்கைத்தரச் செலவு அதிகரித்துக்கொண்டே போவதை ஆட்சேபித்து, இங்கு பெரிய கிளர்ச்சிகள் உருவாகியுள்ளன இந்தக் கிழமை. சர்க்கார் விலக வேண்டுமென்று கோரி இந்தக் கிழமை தொழிலாளர்களும் மத்தியதர மக்களும் 'பட்டினிப் பட்டாளம்' என்கிற பெயருடன் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள நடத்தினராம். அரசாங்கக் காரியாலயங்களும், நிலைமையை சர்க்காருக்கு எடுத்துக் கூறி நீதி பெற்றுத் தராத பத்திரிகாலயங்களும் தாக்கப்பட்டனவாம். அவர்களை அடக்க சர்க்கார் இராணுவத்தைக் கொண்டு சுட்டதாகவும் அதன் காரணமாகப் பலர் மாண்டதாகவும் தெரிகிறது.

★

REGD. NO. M. 4642
போன் நெ. 15

# பிணப் பாதுகாப்பு

ஆண்டாண்டுதோறும் அழுது புரண்டாலும், மாண்டார் வருவதில்லை என்பது உண்மை. மாண்டார் என்றால் யார்? மாண்டது உடலா? உடலை இயக்கிவந்த உயிரா? உயிர் கண்ணுக்குப் புலனாகாத ஒன்று. ஆகவே அது மாண்டதா மாளவில்லையா என்று படுகின்ற கவலையைவிட உடலைப்பற்றிய கவலைதான் பெரிதாக இருக்கிறது.

செத்தவன் உடலைக் கொளுத்திக் கருக்கிச் சாம்பலாக்கியோ புதைத்து மண்ணாக்கியோ மறந்துவிடுவதுதான் பெரும்பாலும் வழக்கம். ஆனால் சில இடங்களில் முன்னாளில் செத்துவிட்ட உடலைச் சாகாமல் வைத்திருக்க முயன்ற முயற்சியும் இருந்திருக்கிறது.

எலுமிச்சம் பழம் அழகானதுதான். நல்ல நிறம்தான். ஆனால் அப்படியேவிட்டு வைத்தால் எத்துணை நாட்களுக்குக் கெடாமல் இருக்கும். உப்பில் ஊற வைத்துவிட்டால்சுவையும் ஊறுகின்றது, பயனும் அடைகின்றோம்.

எழுந்து விழும் அலைகளில் வலைஞன் பாய்ந்து கவர்ந்து வருகின்றான் மீன்களை. ஆனால் பல நாள் வைத்திருக்கும் பக்குவம் செய்யபபட்டால்தான் அது பதம் கெடாமல் இருக்க முடியும்.

மனிதனையும் செத்தவுடன் அழித்துவிட மனம் இல்லாதவர்கள் அவன் உடலைப் பாதுகாக்க எவ்வளவோ முறைகளைக் கையாண்டு இருக்கின்றனர்.

நல்ல தூய்மையான காற்றுக்குப் பொருள்களைப் பாதுகாக்கும் குணம் உண்டு. பாலைவனங்களில் வெற்றிடங்களில் நீரும் நிழலும் இன்றி வாடிச் செத்தவர்களின் பிணங்கள் பல ஆண்டுகளுக்குப் பின்னரும் குலையாது இருப்பதாகக் கூறுகின்றனர்.

பெருவியன் இன மக்கள் இறந்தவர்களின் உடல்களை உயர்ந்த மேடுகளில் கொண்டுபோய் வைத்துவிடுவார்களாம். அங்கு அவை பல ஆண்டுகள்வரை அப்படியே கிடக்குமாம்.

உலகத்து மக்களினங்களில் எகிப்தியரே இந்தக் கலையில் கை தேர்ந்தவர்கள் என்கின்றனர். ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்குப் பின்னரும் அவர்களுடைய பிணங்கள் பிணங்களாகவே இருக்கின்றன. பிணங்களை அழகான தனி வீடுகளில் வைத்துப் போற்றும் பழக்கம் முன்பு அவர்களிடை இருந்து வந்திருக்கிறது.

பிணத்தின் மூக்கு வழியாக ஒரு கம்பியை நுழைத்து சிறுகச் சிறுக மூளையை எல்லாம் வெளியில் எடுத்துவிடுவார்களாம். பிறகு மருந்துப் பொருளை அந்த இடத்தில் இட்டு நிரப்பிவிடுவார்களாம். வயிற்றுள் இருக்கும் குடல் முதலிய உறுப்புகளை எடுத்துவிட்டு, சாம்பிராணி, போன்ற சில பொருள்களைக் கலந்து வயிற்றுக்குள் அடைத்துவிடுவார்களாம். பிறகு ஒரு திரவத்தில் 70 நாட்கள் ஊற வைத்திருப்பார்களாம். அதன் பின்னர் பிணத்தின்மீது வகைவகையான ஆடைகளை அவரவர்களது விருப்பத்திற்கு ஏற்ப அணிவித்து, படுக்கையில் படுத்திருப்பது போல் கிடத்திவிடுவார்களாம். அப்படிப் பாதுகாக்கப்பட்ட உருவங்கள் பல ஆண்டுகளுக்குப் பின்னரும் கூட அழியாமல் இருக்கின்றன.

உலகம் புகழும் பிரமிட்டுகள் இதுபோல் பாதுகாக்கப்பட்ட பிணங்களின் வீடுகள் என்று சொல்லப்படும்.

காற்றைப்போலவே கடுமையான குளிருக்கும் பொருள்களைப் பாதுகாக்கும் தன்மை உண்டு. பனிப்பாலைப் பகுதிகளில் செத்துவிட்டவர்களின் சடலங்கள் சீரழியாமல் சிதையாமல் கிடக்கின்றன என்று கூறுகின்றனர். பனிக் கட்டிகளுக்கு அந்தத் தன்மை இருப்பதினால்தான் குளிர் அறைகளில் வைக்கபபெறும் உணவுப் பொருள்கள் நாட்கணக்கில் கெடாமல் இருக்கின்றன. பழங்கள் மாதக் கணக்கில் புதுமையோடு இருக்கின்றன.

கோவாவில் கிறுத்துவ சமயத் தலைவர் ஒருவரின் உடலம் பல ஆண்டுகளாக சிதையாமல் வைக்கப்பெற்றிருப்பதும் லெனினின் உடலை உருசிய நாட்டினர் பாதுகாத்து வைத்திருப்பதும் இத்துறையில் விஞ்ஞானம் கண்ட சாதனைகள் என்றாலும் எகிப்தியர்க்கே இதில் பெரும் புகழ் உண்டு.

காஞ்சீபுரம், 95, திருக்கச்சிநம்பி தெரு திராவிடநாடு அச்சகத்தில்